# 420 மூடைகளுடன் வத்தை மூழ்கியது

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THF BEI ANAL U

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 271
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 24 றமழான் 10 செவ்வாய்க்கிழமை (10-11-70)

முக்கிய அறிவித்தல்

சிவ தீட்சை

13-11-70 ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமை வரைக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய சைவ அநுட்டான விதிப் புத்தகம் வழங்கப்படும். தேவை யானோர் எமது விற்பனை வானில் அல்லது தொழிற்சாலைக் கந்தோரில் அல்லது கடிதமூலம் எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.

மில்க் வைற்

சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77. - யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணக் கடலில்

### சம்பவம்; 109 மூடைகள் வீசப்பட்டன

யாழ்ப்பாணம், செவ். கடல் கொந்தளிப்புக் காரணமாக 420 அரிசி மூடைகளை ஏற்றிவந்த வத்தை யாழ்ப்பாணம் துறைமுகத் திற்கருகாமையில் கடலில் மூழ்கியது.

கடல் கொந்தளிப்பைத் தொடர்ந்து மற்றெரு வத்தையிலிருந்த அரிசி மூடைகளில், 109 மூடைகள் கடலில் வீசப்பட்டன இந்த வத்தையும் கடலில் மூழ்காமல் தடுக்கவே இவ்விதம் செய்யப்பட்டதாம்.

அரிசி மூடைகள் மூழ்கியது சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட விளக்கத்தை நேற்று சுங்க இலாகா அதிகாரி ஏற்றுக் கொண்டார். இதுபற்றி நடந்த விசாரணையிலும் இக்காரணங்கள் கூறப்பட்டதாகத் தெரியவருகிறது

## கச்சதீவுப்பகுதியில் எண்ணை படிவம் இருக்கிறது

### ஆட்சி மன்றத்தில் உதவி மந்திரி தகவல்

( நமது நிருபர் நவரத்தினே )

கொழும்பு, திங்கள் ''கச்சதீவுப்பகுதியில் எண்ணெய்ப் படிவங்களிருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.''

இத்தகவலை உதவி மந்திரி திரு. ரத்ன தேசப்பிரிய சேனநாயகா நேற்றிரவு ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது அக்குரணை முதலாவது பிரதிநிதி ஜனப். ஏ. ஸி. எஸ். ஹமீது பேசிக்கொண்டிருக்கையில் ஒரு கட்டத்தில் குறுக்கிட்டு திரு. ரத்ன தேசப்பிரிய சேன நாயகா இதைச்சொன்னர்.

ஜனப் ஹமீது பேசுகைல் ... தாக நிபுணர்கள் தெரிவித்திருப்பதாகக் கூறினர். இவர் இப்படிக் கூறியதும் கச்சதீவுப்பகுதியில் எண்ணெய்ப்படிவமிருப்பதாக இந்தியாவிலோ, இலங்கையிலோ தகவல் தெரிவிக்கப்பட்டிருப்பது இதுதான் முதல்தடவையென்றும் இது தமக்குமகிழ்ச்சியளிப்பதாகவும் ஜனப் ஹமீது கூறினர்.

ஆட்சி மன்றத்தில் திரு. ரத்னதேசப்பிரியசேனநாயகா தெரிவித்த இத்தகவல்தான் கச்சதீவுமீது இந்தியாவும் இலங்கையும் உரிமை கொண்டாடுவதற்கும் இருதரப்பினரும் இதில் விட்டுக்கொடுக்கத் தயங்குவதற்கும் அடிப்படைக் காரணம் என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

## புற்றுநோயைக் கட்டுப்படுத்த புதிய கண்டுபிடிப்பு

நியுயோர்க், நவ. 9 புற்றுநோய்க் கலன்களின் (செல்) பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய புதிய இரசாயன கலவைப்பொருளை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சாதாரணமாக விரைந்து பல்கிப் பெருகும் தன்மை உடைய புற்றுநோய்க் கலன்களைத் தடுப்பதற்கு அமெரிக்க உயிரியல் இரசாயன விஞ்ஞானிகள், அமெரிக்க இரசாயன ஆய்வு கூடத்தில் ஆராய்ச்சி செய்ததன் பயனாய் இந்த இரசாயனப் பொருளைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

புற்றுநோய் காரணமாக மேற்கத்திய நாடுகளில் பலர் ஆண்டுதோறும் இறக்கிருர்கள். இக்கொடிய நோயில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு இப்புதிய கண்டுபிடிப்பு உதவும் என விஞ்ஞானிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

யாழ்: பஸ் நிலைய சம்பவம்

## பகிரங்க விசாரணை கோரும் பிரேரணை வருகிறது

யாழ்ப்பாணம், திங்கள் 'யாழ்ப்பாணம் காரியாதிகாரியின் அலுவலகம் நகரின் ஒரு கோடியில் இருப்பதால் பொதுமக்கள் மிகவும் சிரமமடைகிருர்கள். ஆகவே நகர மக்கள் யாவரினதும் வசதியை முன்னிட்டு நகரின் மையமான ஓர் இடத்திற்கு காரியாதிகாரி அலுவலகத்தை மாற்றும்படி இச் சபை யாழ் மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுக் கொள்ளுகிறது' எனக் கோரும் பிரேரணையொன்றை யாழ் மாநகர சபை உறுப்பினர் திரு எம். எஸ். பேரின்பநாயகம் இம் மாதம் 18ம் திகதி நடைபெற விருக்கும் சபையின் மாதாந்தக் கூட்டத்தில் எடுத்துக்கொள்ள முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

'கடந்த மாதம் 31ம் திகதி யாழ் மத்திய பஸ் நிலையத்தில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றியும், இ. போ. ச. ஊழியர்களின் பொறுப்பற்ற நடத்தை பற்றியும், பொதுமக்கள் மீது நடைபெற்ற வன்செயல்கள், தாக்குதல் பற்றியும் ஏராளமான பிரயாணிகள் மணிக்கணக்கில் காத்து நிற்க பஸ் ஊழியர் திடீர் வேலை நிறுத்தம் செய்து பொது மக்களைச் சொல்லொணுக் கஷ்டத்துக்குள்ளாக்கியது பற்றியும். இவ்

(4-ம் பக்கம் பார்க்க)

மூக்காலஞ்சேனை வேலைநிறுத்தம்

## சுமுக முடிவின்றேல் மேலும் பரவுமாம்

தெனியாய, திங்கள் தெனியாய மூக்காலஞ்சேனைத் தோட்டவேலை நிறுத்தம் ஒரு சுமுகமான முடிவுக்கு வராவிட்டால் சப்ரகமுவ, தெனியாயப் பகுதியிலுள்ள சுமார் பத்தொன்பதாயிரம் ல. தோ. தொ. யூனியன் தொழிலாளர்களும் அடையாள வேலை நிறுத்தத்தில் குதிப்பார்கள் என மேற்படி யூனியன் இணைக்காரியதரிசி திரு. வி. சு. இராஜா பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

மூக்காலஞ்சேனை தோட்டத்துரை திரு. நாதேசனின் வேலை நீக்கத்தை எதிர்த்தும் அவரை மீண்டும் வேலையில் அமர்த்தும்படி வலியுறுத்தியும் கடந்த ஆகஸ்ட் 27-ந் திகதி தொடக்கம் ல. தோ. தொ யூனியன் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

## சினிமா நடிகர்கள் ஒப்பந்தத்தில் கட்டுப்பாடு

சென்னை, நவ 8 தீர்மானத்தை ...

வெலிமடை தேர்தல் ஆட்சேபனை

## அப்பீலும் செலவுடன் தள்ளுபடியானது

கட்டுப்பத்தை தொழில் நுட்பக்கல்லூரி

## காலவரையறையின்றி மூடப்பட்டது

### பொலிஸ்—மாணவர் கைகலப்பின் எதிரொலி

கொழும்பு, திங்கள் கட்டுப்பத்தை இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே இன்று பலத்த கைகலப்பு ஏற்பட்டது. மாணவர்களைக் கலைப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தில் கண்ணீர்ப் புகையும் பிரயோகிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

விஞ்ஞான ஆய்வு கூடம் பலத்த சேதத்துக்குள்ளானதாகவும், அதிபருக்கு காயம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. மாணவர்களைக் கலைக்கச் சென்ற பொலிசாருக்கும், மாணவர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் கண்ணீர் புகை பிரயோகித்தனர்.

தேவையான தராதரமில்லாதிருந்தும் தகுதியற்ற முறையில் 23 முஸ்லிம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டதை ஆட்சேபித்து பொறியியல் துறை மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்தது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தத்தில் குதிப்பார்கள் என மேற்படி யூனியன் இணைக்காரியதரிசிதிரு.வி.சு. ளர்கள் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது அக்குரானை முதலாவது பிரதிநிதி ஜனுப். ஏ. ஸி. எஸ். ஹமீது பேசிக்கொண்டிருக்கையில் ஒரு கட்டத்தில் குறுக்கிட்டு திரு. ரத்ன தேசப்பிரிய சேன நாயகா இதைச்சொன்னுர்.

ஜனுப் ஹமீது பேசுகையில், மன்னுர்ப் பகுதியில் எண்ணெய்ப் படிவங்களிருப்பதாக அறிக்கைகள் வெளிவந்ததாகவும் எண்ணெய் எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் இலங்கை வெளிநாட்டு உதவி எதையும் எதிர்பார்த்திருக்க வேண்டியதில்லை யென்றும் வெளிநாடுகளுக்கும் இலங்கையே உதவியளிக்கக்கூடிய நிலையிலிருக்குமென்றும் சொன்னுர்.

இச்சந்தர்ப்பத்தில்தான் திரு ரத்னதேசப்பிரிய சேனநாயகா குறுக்கிட்டு கச்சதீவுப்பகுதியில் எண்ணெய்ப் படிவங்களிருப்ப

வும் ஜனுப் ஹமீது கூறினுர். ... றன.

ஆட்சி மன்றத்தில் திரு.

## சினிமா நடிகர்கள் ஒப்பந்தத்தில் கட்டுப்பாடு

சென்னை, நவ 8

ஒரே சமயத்தில் 9 படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் முன்னணி நடிகர்களையும் 15 படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் உப நடிகர்களையும் மேற்கொண்டு புதிய படங்களுக்கு ஒப்பந்தஞ்செய்யக்கூடாதென சென்னையில் நடைபெற்ற சினிமா தயாரிப்பாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இச்சங்கக் கூட்டத்துக்கு ஏ. வி. மெய்யப்பன் தலைமை வகித்தார்.

தென்னக திரைப்பட வர்த்தக சபைத் தலைவர் ஏ. எல். ஸ்ரீநிவாசன் இத்தீர்மானத்தை எல்லா தயாரிப்பாளர்களுக்கும் அறிவிப்பார்.

கி. ச. தேர்தலில்

## ஸ்ரீ. ல. சு. கட்சிக்கு அமோக வெற்றி

கடுகண்ணுவ, திங்கள்

வடக்கு உடுநுவர மெது பலதா கிராமசபைத் தேர்தலில் ஸ்ரீ. ல. சு. கட்சி 10 இடங்களில் வெற்றி ஈட்டியுள்ளது. மொத்தம் 13 வட்டாரங்களில் 2 சுயேச்சை அபேட்சகர்களும், 1 ஐ தே க. அபேட்சகரும் வெற்றியீட்டினர்.

வெலிமடை தேர்தல் ஆட்சேபனை

## அப்பீலும் செலவுடன் தள்ளுபடியானது

### பண்டாரா தொடர்ந்தும் எம். பி.

கோட்டை, திங்கள்

வெலிமடைத் தொகுதியின் ஆட்சிமன்றப் பிரதிநிதியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேரந்த திரு. ஆர் எம். பண்டார தமது ஸ்தானத்தைத் தப்பவைத்துக்கொண்டிருக்கிறுர். திரு பண்டார தொடர்ந்தும் வெலிமடைப் பிரதிநிதியாக ஆட்சிமன்றத்தில் இருப்பார்

திரு. பண்டார வெலிமடைத்தொகுதியிலிருந்து ஆட்சிமன்றத்துக்குத்தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாதென்று தீர்ப்பளிக்க வேண்டுமெனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தேர்தல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுத் தள்ளுபடிசெய்யப்பட்டிருந்தது. தேர்தல் நீதிமன்றமளித்த தீர்ப்பை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டிருந்தது.

சுப்ரீம் கோர்ட்டில் பிரதம நீதியரசர் திரு எச். என். ஜி. பெர்னுண்டோ தலைமையில் நீதியரசர் ஜி. பி. ஏ. சில்வா, ஏ. எல் எஸ் சிறிமானே ஆகியோர் இதை விசாரணைசெய்து முடிவில் செலவு தொகையுடன் தள்ளுபடிசெய்து தீர்ப்பளித்தனர்.

கொழும்பு, திங்கள்

கட்டுப்பத்தை இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே இன்று பலத்த கைகலப்பு ஏற்பட்டது. மாணவர்களைக் கலைப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தில் கண்ணீர்ப் புகையும் பிரயோகிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

விஞ்ஞான ஆய்வு கூடம் பலத்த சேதத்துக்குள்ளானதாகவும், அதிபருக்கு காயம் ஏற்பட்டதாகவும் கூறப் பிரயோகித்தனர்.

தேவையான தராதரமில்லாதிருந்தும் தகுதியற்ற முறையில் 23 முஸ்லிம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டதை ஆட்சேபித்து பொறியியல் துறை மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்தது தெரிந்ததே.

3 வருடங்களின் முன் நடந்த முருங்கன்வர்த்தகர்கொலை

## பொலிஸ் வலையில்சந்தேக நபர்கள் விரைவில் சிக்குவராம்

மன்னுர், திங்கள்

மூன்று வருடங்களாக இருள் மூடிக்கிடந்த கொலை மர்மம் துலங்கத் தொடங்கியுள்ளதாம். இக்கொலையையொட்டிய முழு இரகசியத்தையும் துப்புத்துலக்கி கொலையாளிகளைச் சட்டத்தின் பிடிக்குள் கொணர்வதற்காக மன்னுர் பொலிஸ் தலைமை நிலைய இன்ஸ்பெக்டர் ஜனுப் எம். எஸ். எம். நிசாம் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

முருங்கன் கடைத் தெருவில் நடந்ததான இக்கொலை சம்பந்தமான விவகாரங்கள் மீண்டும் வெளியாகியதைத் தொடர்ந்து மன்னுரிலும் குறிப்பாக முருங்கன், வங்காலை, அரிப்பு ஆகிய பகுதிகளிலும் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

முருங்கனில் பிரபல இளம் வர்த்தகரான சந்தியா குருஸ் என்பவர் தமது கடையினுள் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொலையுண்டு கிடக்கக் காணப்பட்டதும் இக்கொலை சம்பந்தமாக இதுவரை எவ்வித துப்பும் வெளிவராதிருந்ததும் தெரிந்ததே.

சந்தியா குருசின் இம்மர்மக் கொலையைத் தொடர்ந்து முருங்கன் பஜார் பகுதியில் சிறிதுகாலம் பரபரப்பு நிலவிவந்தது குறிப்பிடத்தக்கது.

இக்கொலை சம்பந்தமான விசாரணையில் இறங்கிய மன்னுர் பொலிஸார் பல நாட்கள் முயற்சிகள் எடுத்தும், பல பேர்களை சந்தேகத்தில் விசாரித்தும் விசாரணையில் முன்னேற்றம் காண முடியாதிருந்தது.

பெரும்பாலும் மறந்துவிடப்பட்ட நிலையிலிருந்த இக்கொலை சம்பந்தமாக எதிர்பாராமல் கிடைத்த சில புதிய தகவல்களைக் கொண்டு இன்ஸ்பெக்டர் நிசாம் இப்போது துப்புத்துலக்குவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். விரைவில இக்கொலையின் முழுமர்மமும் துலக்கப்பட்டு, சந்தேக நபர்கள் நீதி விசாரணைக்கு நிறுத்தப்படுவார்கள் என்று பொலிஸ் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

## புளுங்கல் அரிசி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். நகரில் நோன்பு காலத்தையொட்டி கூப்பனுக்கு மில்சாட் அல்லது புளுங்கல்அரிசி வழங்குமாறு யாழ். முஸ்லிம் சேவாசங்கச் செயலாளர் ஜனுப் எம். ஈஷாஹூல், யாழ். அரசாங்க அதிபரையும் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்துப்பேசி மகஜர் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து இப்போது புளுங்கல் அரிசிவழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

## மன்னுரில் சலுசலா துணி கிடையாதாம்

மன்னுர், திங்கள்

கூப்பன் புள்ளிகளுக்கு விநியோகிக்கப்படும் சலுசலா துணிகள் மன்னுர்ப் பட்டினத்தில் மட்டும் கிடைக்காதிருக்கிறதாம். மலிவு விலைக்கு இத்துணிகளைத் தமது தேவைக்குப் பெற்றுக்கொள்ள முடியாது இப்பகுதி மக்கள் சலிப்படைந்துள்ளனர்.

மன்னுர் பஜாரில் பலகாலமாக இந்தக் குறைபாடு நிலவிவருகின்றது. இங்கு சுமார் பத்து உத்தரவு பெற்ற சலுசலா ஜவுளி வர்த்தகர்கள் இருக்கின்றுர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேதின ஊர்வல வழக்கு தள்ளுபடி; எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

மேதின ஊர்வல வழக்கு நேற்று தள்ளுபடி செய்யப்பட்டு எதிரிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

1969-ம்ஆண்டு மேமாதம் முதலாம் திகதி சட்ட விரோதமான முறையில் ஊர்வலம் நடாத்தியதாக சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே.ஏ. சுப்பிரமணியம், கே. டானியல், மரைக்காயர், கௌரிகாந்தன் முதலான ஏழு பேர்கள் மீது குற்றம் சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஜே. ஜே. எஸ். டயஸ் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டு வந்தது.

விசாரணை முடிவில் நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரிகளை விடுதலை செய்தார்.

எதிரிகள் சார்பில் திரு. ஏ. எல். கரவித்தா, புரக்டர் அ. அன்ரனியின் அனுசரணையுடன் ஆஜராயிருந்தார்.

## 18 இளைஞர்கள் கைது

மருதானை, திங்கள்

நேற்று மருதானைப் பொலிஸாரால் 18 இளைஞர்கள் டீன்ஸ் தெருவிலுள்ள கட்டிடம் ஒன்றில் வைத்து கைதுசெய்யப்பட்டனர். சேகுவேரா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்

## இந்திய வர்த்தகர்கள் நாடு திரும்ப முஸ்தீபு

### பிரஜாவுரிமை பெற்றவர்களும் போக விரும்புகின்றனர்

கொழும்பு, திங்கள்

இலங்கையிலுள்ள இந்திய வர்த்தகர்கள் பலர் இலங்கையை விட்டுத் தாயகம் திரும்புவதற்கு முனைந்துள்ளனர். முன்னர் இலங்கைப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்த இந்திய வம்சாவளி வர்த்தகர்கள் கூடத் தாயகம் திரும்புவதற்காக இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தில் மனுச்செய்துள்ளனர். இலங்கைப் பிரஜாவுரிமை எடுத்தவர்களும் தங்கள் பிரஜாவுரிமையை ரத்துச் செய்துவிட்டு இந்தியா செல்வதற்காக மனுச்செய்துள்ளனர்.

வர்த்தகம் தொழில் ஆகிய துறைகளில் இலங்கை அரசாங்கம் பெருமளவில் கைவைக்க விரும்புவதாலும் இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகத்தை அரசாங்கக் கூட்டுத்தாபனம் அடுத்தஜனவரி முதல் ஏற்றுக்கொள்ளவிருப்பதாலும் இவர்கள் இங்கிருந்து வெளியேற விரும்புவதாகக் கூறப்படுகிறது. இரத்தினக்கல் வியாபாரத்துடன் நகை வியாபாரம், ஈடுபிடிக்கும் தொழில் ஆகியவற்றை அரசு எடுக்கவிருப்பதாலும் இந்திய வம்சாவளி வர்த்தகர்கள் இங்கிருந்து வெளியேற முன்வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த வர்த்தகர்கள் சம்பந்தமாகவும் இலங்கை அரசாங்கம் சமீபத்தில் எடுத்துள்ள நடவடிக்கைகள் இந்திய வம்சாவளியினரைப் பாதிக்கும் விஷயங்கள் பற்றியும் இந்திய அரசாங்கத்துடன் இந்திய தூதரகம் தொடர்பு கொண்டுள்ளது.

(பி. டி. ஐ.)

......

## 'விசேட அலவன்ஸ் வழங்குக

கோட்டை, திங்கள்

கஷ்டமான பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படும் தாதிமார்களுக்கு விசேட அலவன்ஸ் வழங்குமாறு அகில இலங்கை தாதிமார் சங்கத்தின் பொதுக்காரியதரிசி திரு. லியோ பெர்ணுண்டோ சுகாதார அமைச்சர் திரு. டபிள்யு. பி. ஜி. ஆரியதாசாவிடம் மகஜர் மூலம் கேட்டுள்ளார்.

## மன்னுரில் விவசாயிகள் சுறுசுறுப்பு

மன்னுர், திங்கள்

கடந்த சில தினங்களாக மன்னுர் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவலாக மழை பெய்துவருகின்றது. தொடர்ந்தும் மழைபெய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருந்துவருகின்றன. இம்மழையைத் தொடர்ந்து மன்னுரில் நிலவிவந்த கடும் வெப்பநிலை தணிந்துள்ளது.

பருவமழை இவ்வருடம் சதிசெய்துவிடுமோ என அஞ்சி வருந்திக்கொண்டிருந்த மன்னுர் மாவட்டத்தின் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் தற்போது காலபோக வேளாண்மைக்குரிய முயற்சிகளில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டுள்ளனர். இம்மழைக்குப் பின் கமக்காரர் பல பகுதிகளிலும் தத்தமது வயல்களை உழுது பண்படுத்துவதில் முனைந்துள்ளனர். இம்மாத முடிவுக்குள்ளேயே காலபோக நெல் விதைப்புத் தொடங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 50 ஆயிரத்துக்கு மேல் சேமிப்புப் புத்தகங்கள்

வெள்வத்தை, திங்கள்

பழைய 50 ரூபா 100ரூபா நோட்டுக்களைச் செல்லுபடியாக்குவதற்காகப் பெருந்தொகையானேர் தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியில் போட்டுள்ளனராம். சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய சேமிப்புப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளனவாம்.

## வேலைநிறுத்தம் செய்யும்போது ஸ்தாபனங்களை மூடப்படாது!

### விரைவில் சட்டம் வருகிறது

கொழும்பு, ஞாயிறு

ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்யும்போது ஸ்தாபனங்கள் மூடப்படக் கூடாது என்ற சட்டம் விரைவில் கொண்டு வரப்படவிருக்கிறது. இத் தகவலை தொழில் அமைச்சர் இன்று ஆட்சி மன்றத்தில் தெரிவித்தார்,

தொழில் அமைச்சர் இன்று ஆட்சி மன்றத்தில் பேசுகையில் கூறியதாவது:

தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்களை விரைவில் கொண்டுவரவிருக்கின்றேன் கம்பனிகளை முதலாளிமார் நினைத்தநேரம் மூடப்படுவதை தடை செய்யும் சட்டம் விரைவில் வரவிருக்கிறது. நான் தொழில் அமைச்சராகப் பதவிஏற்றகாலத்தில்தோட்டப்பகுதிகளில் 132 வேலைநிறுத்தங்களும் கைத்தொழில் பகுதிகளில் 49 வேலைநிறுத்தங்களும் நடந்துகொண்டிருந்தன. இவற்றில் முதலாவதில் 117ஐயும் இரண்டாவதில் 31ஐயும் சமரசமாகத் தீர்த்துவைத்துள்ளேன்,

கொழும்பு மத்தி எம். பி ஆர் பிரேமதாசா பேசுகையில் உள்ளூராட்சி அமைச்சர் யு. என். பி கட்சிஆதரவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களைக் கலைத்து பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டினுர்.

பழைய 100, 50 ரூபா நோட்டுக்களைப் பற்றிய செய்திகளை பத்திரிகைகளில் அரசாங்கத்துக்கு எதிராக பிரசுரிக்கக் கூடாது என்று தடைவிதிக்கப்பட்டிருப்பதின் காரணம் என்ன என்றுஅவர்கேட்டார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

ரூபா 5,000/- உடனடியாகத் தேவை. பூவரசங் குளத்திலுள்ள 10 ஏக்கர் பிரத்தியேக தெற்காணி மூன்று வருடங்களுக்கு நிபந்தனை அறுதி முடித்துக் கொடுக்கப்படும் (Condition--al Transfer). வட்டி மாதம் மாதம் கொடுக்கப்படும். விளம்பர இல. 2502, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம்.

### பணம்

யாழ். நகரில் ஒரு வர்த்தகருக்கு மிக அவசரமாக ரூபா 6,000 தேவை. நியாயமான வட்டி மாதாந்தம் கொடுக்கப்படும். (15-11-70 க்கு முன்னராயின் பழைய நோட்டுகளும் ஏற்கப்படும்) குறைந்த தொகை உள்ளவர்களும் தொடர்புகொள்க. விளம்பர இல 2398, மே/பா. 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2398

### விற்பனைக்கு

பிடவைக்கடைகளுக்குத் தேவையான அலுமாரிகள் (16) உடனடியாக விற்பனைக்குண்டு. 4 பக்கங்களும் கண்ணாடி 1/2'' பொருந்தியவை ஒவ்வொன்றும் 5 1/2' நீளமும் 2 1/2' அகலமும் உடையவை. 85, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 360. மற்றும் விபரங்களுக்கு: மனேஜர், றீகல் சினிமாவுடன் தொடர்புகொள்க. 2501

## பரிசு வழங்கத் தீர்மானம்

வேலணை, திங்கள்

வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் கூட்டுப்பிரார்த்தனையின் போது கிரமமாகப் பங்குபற்றும் சிறுவர்களுக்கு மூன்று மாதத்திற்கொருமுறை பரிசு வழங்குவதெனவும் இவர்களுக்கு விநியோகிப்பதற்குச் சிறிய அளவில் தேவாரப் புத்தகம் அச்சிடுவதெனவும் வேலணை கிராமச் சீர்திருத்தச் சங்கம் தீர்மானித்துள்ளது.

## இன்று நடக்கும் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

மர்ஹூம் ஜுனைப் யூ எம். ஐத்துறூஸின் 3-வது நினைவு தினத்தையிட்டு யாழ். டைகர் விளையாட்டுக் கழகம் இன்று பிற்பகல் ஜின்னா மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்துகின்றது. இதில் வெற்றி பெறும் கோஷ்டி இறுதி ஆட்டமாக நாளை மறுதினம் இம் மைதானத்தில் யாழ். டைகர் கோஷ்டியுடன் போட்டியிடும். வெற்றி பெறும் கோஷ்டிக்கு அன்னாரின் ஞாபகார்த்தமாக யாழ். நகரசபை ஆணையாளர் திரு. ஏ. ரி. சுந்தரம் பரிசுகள் வழங்குவார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்.10—11—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 திரைகானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் விருந்து

இரவு 6-10 இடைவேளை இசை 6-15 முத்திநெறி 6-35 பெண்ணுலகம், 7-00 வாத்திய இசை, 7-15 சித்திரம், 7-45 இவ்வாரப் பிரமுகர் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்தித்தொகுப்பு


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ—மனோரமா நடித்த

செல்லப்பெண்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர்— லட்சுமி ஜெயலலிதா — அசோகன் நடித்த


உதை பந்தாட்டம்

## றெக்ளமேஷன் கோஷ்டி நுவரேலியாவில் தோல்வி

யாழ்ப்பாணம், செவ்.

குருநகர் றெக்கிளமேஷன் சனசமூக நிலைய உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், நுவரேலியா 'புருவரி' உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நுவரேலியாவில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 'புருவறி' வெற்றி பெற்றது.

கடுமையான குளிரையும் பொருட்படுத்தாது இரு கோஷ்டிகளும் மோதிய ஆட்டம் ரசிப்பாக இருந்தது. இடைவேளையின் போது, இரு கோஷ்டிகளும் தலா 1—1 கோல்களைப் பெற்றிருந்தன. இடைவேளையின் பின் 'புருபரி' கோஷ்டி 'பெனல்டி' மூலம் ஒரு கோலைப் போட்டு 2—1 கோல்களால் ஆட்ட இறுதியில் வெற்றி பெற்றது.

### நுவரேலியா வெற்றி

றெக்கிளமேஷன் சனசமூக நிலையக் கோஷ்டிக்கும் நுவரேலியா தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் நுவரேலியாக் கோஷ்டி வெற்றி பெற்றது.

மேற்படி இரு கோஷ்டிகளும் ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை மிகவும் கடுமையாகவே மோதின. ஆட்டம் தொடங்கி பத்து நிமிடத்தினுள் நுவரேலியாக் கோஷ்டி ஒரு கோலைப் போட்டது. இதன் பின் இரு கோஷ்டிகளும் ஆட்டம் முடிவடையும் வரை கோல்கள் எதையும் போடவில்லை. இந்தப் போட்டியில், றெக்கிளமேஷன் கோஷ்டி பல இலகுவான கோல்களைப் போடும் கட்டங்களை நழுவ விட்டதினாலேயே 1—0 கோலால் ஆட்ட இறுதியில் தோல்வியடைந்தது.

றெக்கிளமேஷன் கோஷ்டி நுவரேலியாவில் கலந்து கொண்ட இரு ஆட்டங்களிலும் இக் கோஷ்டியின் கோல்காப்பு வீரர் எம். பி. கோமேந்திரனின் ஆட்டம் சிறப்புற்று விளங்கியது. மற்றும் எம். தேவதாஸின் ஆட்டமும் ரசிப்பாகக் காணப்பட்டது.

றெக்கிளமேஷன் கோஷ்டியினர், நுவரேலியா உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் திரு. அமீரின் அழைப்பின் பேரில் திரு. சற்சிங்கராயர், திரு. எம் பஞ்சநாயகம் ஆகியோரின் தலைமையில், நுவரேலியா சென்று திரு[illegible]னர். (தே நி)

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 24-ந் திகதி

(10-11-70)

மேஷம்- மனம் நிறைந்த வாழ்வு. மக்களால் மகிழ்ச்சி இவற்றுடன் கண்ணியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

ரிஷபம்- அதிக ஆசை ஆபத்தைத் தேடித்தரலாம் அன்னியர்களுடன் பழகுவதில் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

மிதுனம்- அறிவாற்றலை வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப்பீர்கள் புலவர்கள் போற்றப்படுவார்கள்.

கடகம்- புத்திரவழியால் புகழ்வந்து சேரும். வெளியூர் பயணமும் உண்டு. குடும்பத்தில் சுமூகமான நிலை தென்படும்.

சிம்மம்- முக்கியமான விடயங்களை இன்று பின் பாடுவது விரும்பத்தக்கது. உள்வீட்டிலேயே உளவு வேலை நடைபெறலாம்.

கன்னி- இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் உருவாகும்.

துலாம்- எதிலும் நன்றாகச் சிந்தித்தபின்பு செயலாற்றவும், நண்பர் ஒருவர் மூலம் நீங்கள் ஏமாற்றமடையலாம்.

விருட்சிகம்- தெய்வபக்தி மேலிடும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள் பொதுமக்களின் மதிப்புக் கிட்டும். சுமூகமான நாள்.

தனுசு- தங்கக்குணம் மேலிடும். தக்க மதிப்பும் கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும்.

மகரம்- வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெறும்! விருந்துபசாரங்களும் உண்டு.

### சம முடிவு

பண்டத்தரிப்பு, திங்கள் [illegible] யாழ்ப்பாண[illegible] பெறும் தனியார் பாடசாலைகளி[illegible] பழைய மாணவர்களு[illegible]

## கலை-கைத்தொழில்இலக்கிய கண்காட்சி ஏற்பாடு

வெள்ளவத்தை, திங்கள்

1971ம் ஆண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஈழவளக் கண்காட்சி ஒன்றினை இளந்தமிழர் முன்னேற்ற மன்றம் நடாத்த ஏற்பாடு செய்துவருகின்றது

வடக்கு கிழக்குமாகாணங்களில் மறைந்தும், மறைக்கப்பட்டும் இருக்கும் பொருளாதார வளங்களை வெளிக்கொணர்ந்து அதன் முக்கியத்துவத்தை எம்மவர்க்கு எடுத்துக்காட்டி, படித்துவிட்டு வேலையற்றிருக்கும் வாலிபர்களை இத்துறையில் ஊக்குவித்தும் எம்மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் பணம்படைத்தோரின் கவனத்தை இத்தொழில்களின்பால் திருப்பியும், வடக்கு கிழக்கு மாகாணங்களின் பொருளாதார நிலையினை உயர்த்துவதற்காக உழைப்பதே இம்மன்றத்தின் முக்கிய நோக்கம் என்றும் கண்காட்சியும் இதையே பிரதிக்கும் என்றும் மன்றத் தலைவர் திரு. வி. பத்மநாதன் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

கண்காட்சி அமைப்பு கைத்தொழிற் பிரிவு, விவசாயப் பிரிவு, கைப்பணிப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு, பண்பாட்டுப் பிரிவு என்று ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கைத்தொழிற் பிரிவில் பன்ம்பொருள்களிலிருந்து உற்பத்திசெய்யப்படக்கூடிய உணவு வகைகள், பான வகைகள், துடைப்பன், தூரிகைகள், கயிறு, நார் ஆகியனவும் இன்னும் பலவிதமான தொழிற்சாலை உற்பத்திப் பொருட்கள், புடவை உற்பத்தி, மின்தறி, கைத்தறி மூலம் உற்பத்திசெய்யப்படுவன. கண்ணாடி உற்பத்திகள், சவர்க்காரம், அலுமினியம், இரும்பு, உருக்கு, பொன் வெள்ளி, மரவேலை தயாரிப்புகள், தோற்பொருள் உற்பத்தி, பாதணிகள் முதலியன தும்புத்தொழில் உற்பத்திகள், மட்பாண்டம் சீனித் தொழில், கரும்பு, கருப்பணி, பீற்றூட்டிலிருந்து சீனி பெறுதல், உணவு, பானத் தயாரிப்புகள், விவசாயப்பிரிவில் மண்வகைகள், மண்பாதுகாப்பு, நீர் பாதுகாப்பு, பசளைகள் நெல் சிறுதானிய - காய்கறிவகைகள், பழவர்க்கங்கள், [illegible]ணைகள், பறவையினங்கள் ஆதியன அடங்கும்.

கைப்பணிப்பிரிவில் குடிசைக் கைத்தொழில்கள். வத்தல் மோர் மிளகாய், வடகம், பப்படம், எண்ணெய்ப்

கண்காட்சி முடிவடைந்ததும் இதன் தொடர்பாக அடுத்தநாள் கருத்தரங்கம், பட்டிமன்றம் உட்படப் பல கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## திரு. எப்.என்.ஸி. மாஸ்டர்

தங்கப்பதுமை போன்ற தோற்றம்; புன்னகை சிந்தும் முகம்; ஒளிபொருந்திய கண்கள்; மனதைக் கவரும் பேச்சு மற்றும், ஓர் உத்தம ஆசிரியருக்குரிய இலட்சணங்கள் ஒருங்கே அமைந்து, ஆசிரியருக்குள் தலைவராக இருந்து, 40 வருட காலமாகக் கடமையாற்றிவந்த திரு. எவ். என். ஸி. சவரிமுத்து, சம்பத்திரிசியார் கல்லூரியில் இருந்து ஒய்வுபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இவர் ஆங்கிலம், லத்தீன், பிரெஞ்சு முதலான மொழிகளை ஆருகக் கற்று லண்டன் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டதாரியாக 1935ம் ஆண்டு வெளிவந்தார். யாழ்ப்பாணத்தில் வெகு காலமாகச் 'சத்தியவேத பாதுகாவலன்' பத்திரிகையில் நிர்வாக ஆசிரியராகவும், சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆங்கில, லத்தீன் பேராசிரியராகவும் இருந்த காலஞ்சென்ற திரு ஏ. சவரிமுத்து என்பவரின் ஏக புதல்வனுன இவர், குழந்தைச் சுபாவம் படைத்தவர்.

மாணவர்களாலும், சக ஆசிரியர்களாலும் மற்றவர்களாலும் எவ். என். ஸி மாஸ்டர் என அன்புடன் அழைக்கப்பட்ட திரு எவ். என். ஸி. சவரிமுத்து ஆசிரியரிடம் கல்வி கற்க ஆவலோடு காத்திருப்பார்கள் மாணவர்கள், பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் அன்னாரிடம் கல்வி பெற்று இன்று பெரிய பதவிகளில் கடமையாற்றி வருகின்றனர்.

சம்பத்திரிசியார் கல்லூரியின் புகழ் வண ரி. எம் எப். லோங் சுவாமியாரின் மறைவிற்குப் பின் மங்காமல் சுடர் விட்டு எரிவதற்கு காரணமே திரு எவ் என். ஸி. மாஸ்டரின் அயராத சேவையே என்பது யாவரும் அறிந்த உண்மை மனிதருக்குள் மாணிக்கமான இவர், தற்காலத்து இளம் ஆசிரியர்களுக்கு ஓர் வழி காட்டியாக இருந்து வருகின்றார், சம்பத்திரிசியார் கல்லூரியில் இருந்து ஒய்வு பெறப் போன்றார் என்ற செய்தி இளஞ் சந்ததியின் பெற்றார் உலகத்திற்கு நிச்சயம் கவலையளிப்பதாகும். பழைய மாணவராகிய நாம் இத் தந்தையின் கீழ் கல்வி கற்றதையிட்டு இன்றும், என்றும் பெருமைப்படுகின்றேம். அன்னாரின் சுக வாழ்வுக்கு இறைவன் ஆசீர்வதிப்பாராக.

—ஏ ரி. அந்தோனிப்பிள்ளை

## 'எல்லாவற்றுக்கும் அரசை நம்பியிருக்கக் கூடாது'

— கனடா தூதர்

சுழிபுரம், திங்கள்

'நோய்வந்தபின் அதனைத் தடுக்கும் மருந்து வகைகளைக் கொடுப்பதிலும் பார்க்க, நோயைப் பரவாது தடுக்கும் அறிவை மக்களுக்கு ஊட்டுவதே மிகவும் சிறந்ததாகும். கயரோக நோய் மிகவும் பயங்கரமானது, இந்நோயிலிருந்து யாரும் தப்பமுடியாது என எண்ணிய ஒரு காலம் எமது நாட்டில் இருந்ததை யாவரும் அறிவர். இன்று கயரோக நோய் பரவாமல் பல வகையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் இலங்கைக் கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் சேவை அளவிட முடியாததாகும்' என இலங்கைக் கயரோக நிவாரண தேசிய சங்க வலிகாமம் மேற்குக் கிளையின் 13-வது ஆண்டு நிறைவு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ரி. டபிள்யூ அமரசேகரா குறிப்பிட்டார். விழா பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில் அரசாங்கத்தின் பணிக்கு மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மிகவும் தேவையென்றும் கனடாபோன்ற நாடுகளின் பெரும் உதவியுடன் எமது நாட்டில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்றும் நோயை அழிக்க அறிவைக் கைக்கொள்ள வேண்டும் என்றும் சொன்னர்

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கனடாவின் இலங்கைத்தூதுவர் திரு. ஆர். எம். மக்டொனல்ட் பேசுகையில், இலங்கைக்கும்கனடாவிற்கும் மிக நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகவும், மனித முன்னேற்றத்திற்கான பல்வேறு கருமங்கள் கனடாவைப் போன்று இங்கும் நடைபெற்று வருவதாயும் சொன்னர் எல்லாத்தேவைகளையும் அரசாங்கம் நிறைவேற்றி விடும் என மக்கள் எதிர்பார்க்க முடியாது என்றும், கயரோக நிவாரண சங்கம் போன்றவற்றின் உதவியுடன் பல்வேறு பணிகளை நிறைவேற்றலாம் என்றும் அரசாங்க திட்டங்களுக்குப் பொதுச்சேவை இயக்கங்கள் மிகவும் தேவையென்றும் அவர் கூறினர்.

தாய்ச்சங்கத்தலைவர் திரு. எஸ். ஜெயசூரியாவின் புதல்வி தந்தையின் ஆசியுரையை விழாவில் வாசித்தார். தாய்ச்சங்க உபதலைவர் திரு. எஸ். குயிஸ் ஆசியுரை வழங்கினர், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி காயித்திரி கணேஷன் ஆங்கிலத்திலும், திரு. ந. தேவகடாட்சம் தமிழிலும் நன்றி தெரிவித்துப் பேசினர்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு கனடா தூதுவரின் மனைவி திருமதி ஆர். எம். மக்டொனல்ட் பரிசில்கள் வழங்கினர். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன

## பெயரை மாற்றக் கோரிக்கை

கோட்டை, திங்கள்

மருதானை வீதியின் பெயரை மாற்றிஅமைக்கும் படி அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கொழும்பு மாநகரசபையைக் கேட்டுள்ளது.

முன்னைநாள் ஆனந்தாக் கல்லூரி அதிபர்களான திரு பி.டி எஸ் குலரத்தின, திரு எல் எச், மெத்தானந்தா ஆகியோரின் பெயரை அத் தொகுதிக்கு சூட்டும் படி பௌத்த காங்கிரஸ் கேட்டுள்ளது.

## சமய அறிவுப் பரீட்சை

பண்டத்தரிப்பு, திங்கள்

யாழ்.மேற்றிராசன ஞானோபதேச நடு நிலையத்தினரால் நடாத்தப்படும் சமய அறிவுப்பரீட்சை இம்மாதம் 19-ந் திகதி யாழ். மேற்றிராசன எல்லைக்குட்பட்ட கத்தோலிக்க பாடசாலைகளில் 4ம் 6ம் 7ம், 8ம் வகுப்புகளுக்கு நடைபெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் — லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த

# மாட்டுக்கார வேலன்

## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30 , 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

## யாழ்-வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினிகணேசன் ★ சரோஜாதேவி
சுந்தரராஜன — சோ — மனோரமா
நடித்த

# ஐந்து லட்சம்

...கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும்.

மகரம்- வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெறும்! விருந்துபசாரங்களும் உண்டு.

கும்பம்-எவ்விடயத்திலும் நன்றாக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும். முகமன் கூறுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

மீனம்- இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். இதய பாரம் வேதனைப்படுத்தும்

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
ரவிச்சந்திரன் — காஞ்சனு
நடித்த

### அதே கண்கள்

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெய்சங்கர்-விஜயகுமாரி
நடித்த

### பவானி

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Poya days 10-30 a. m.
Cornel Wilde
in
BEACH RED
(Color by Delux)

REGAL
Jaffna
Daily 4-45, 7 & 9-45
Elvis Presley
And
Mary Tyler Moore
in
CHANGE OF HABIT

## சம முடிவு

பண்டத்தரிப்பு, திங்கள்
யாழ்ப்பாணத்தின் இரு பெரும் தனியார் பாடசாலைகளின் பழைய மாணவர்களுக்கிடையே நடைபெற்றருசிகரமான உதைபந்தாட்டத்தில் இரு கல்லூரிகளும் சமபலத்துடன் மோதி தலா இரண்டுகோல்களைப்போட்டு ஆட்டத்தை முடித்துக் கொண்டன.

யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியும் இளவாலை என்றியரசர் கல்லூரியுமே மேற்படி கல்லூரிகளாகும். இந்த ஆட்டம் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

......

## எழுதுமட்டுவாள் வெற்றி

எழுதுமட்டுவாள், திங்கள்
எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச விளையாட்டுக் கழகத்திற்கும் மட்டுவில் கரபந்தாட்டக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் எழுதுமட்டுவாள் கோஷ்டி வெற்றி பெற்றது எழுதுமட்டுவாள் சந்தை மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

......

## இடமாற்றம்

ஏருவூர், திங்கள்
வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராககடமையாற்றிய திரு. ஏ. ஐ. எப். ஜெயரெத்தினநாதன் இரத்தினபுரி ஸ்ரீமான வித்தியாலயத்திக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

... ...

## தாமதம் ஏன்

அம்பன், செவ்வாய்
1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 31-ம் திகதி நடைபெற்ற தபாற்தந்தியாளர் பரீட்சை பெறுபேறுகள் ஒரு வருட காலமாகியும் வெளிவராததையிட்டு மாணவர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். கடந்த ஆண்டு அதே மாதத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற எழுதுவினைஞர் பரீட்சைக்கான பெறுபேறுகள் வெளியானதுடன் கடந்த மாதம் சித்தியெய்திய பரீட்சாத்திகளுக்கு நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளனவாம் 1970-ம் ஆண்டு தைமாதம் 21-ம் திகதி நடைபெற்ற சௌக்கியப் பகுதி மாணவதாதிகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியானதுடன் நேர்முகப் பரீட்சையும் நடைபெற்றுள்ளதாம். மேற்படி பரீட்சையின் பெறுபேறுகள் தாமதமாவதேன் என பரீட்சார்த்திகள் கவலையுறுகின்றனர்.

...லைகள், பறவையினங்கள் ஆதியன அடங்கும்.

கைப்பணிப்பிரிவில் குடிசைக் கைத்தொழில்கள். வத்தல் மோர்மிளகாய், வடகம், பப்படம், எண்ணெய்ப் பொருட்கள், பனுட்டு... கள், வண்ணப்பாய்வகைகள் கற்பூரம். ஆதியனவும் தையல் வேலைப்பொருட்களும் அலங்காரப்பொருட்களும் அடங்கும்.

அறிவியல் (விஞ்ஞானம்) பிரிவில் பாடசாலை மாணவர்களின் அறிவியல் முயற்சிகள். குறைந்தசெலவில்புதிய அறிவியல் தயாரிப்புகள், வடக்குக் கிழக்கு மாகாண பொருளாதார நிலைமைக்கு ஏற்றதாக வளரும் அறிவியல் துறையை ஆக்கத்துறைக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் எனக் காட்டுதலும் அடங்கும்.

பண்பாட்டுப்பிரிவில் ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிப் படிகள். எழுத்தாளர்களின் படைப்புகள். தமிழ்வளர்த்த பெரியார்கள், தமிழ்மொழியின் சிறப்பு, தமிழ்மொழியின் பரிமாண வளர்ச்சி, ஈழத்தின் இலக்கியப் பத்திரிகைகள், ஈழத்துத் தமிழ் மன்னர்கள் மற்றும் சரித்திர நிகழ்ச்சிகளைப் பிரதிபலிக்கும் காட்சிகள் ஆகியவற்றோடு இன்னும்பல அம்சங்களை எடுத்துக்காட்டும்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் வழங்கும் தொழில் சார்பான நாடோடிப்பாடல்கள், பழமொழிகள், முதலியனவும் உழவு, தோணி, அருவிவெட்டு, விறகுவெட்டுதல் மற்றும் ஏனைய தொழில்களின் பாடல்களையும் பழமொழிகளையும் காட்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் சிறந்ததாகத் தெரிவுசெய்யப்படும் முதலாம் இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெறும் காட்சிப்பொருள்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். ஒவ்வோர் நாள் இரவும் வெளிநாட்டுத் தூதரகங்களின் உதவியுடன் கைத்தொழில். கைப்பணி, விவசாய ப பாட்டுத் தொடர்பான படக்காட்சிகள் காண்பிக்கப்படும்.

ஈழவளக் கண்காட்சி முடிவடைந்ததும் மன்றம் ஒழுங்குசெய்த கண்காட்சி பற்றிய மதிப்பீடு சம்பந்தமான ஓர் கட்டுரைப் போட்டி மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்டு முதல் மூன்று கட்டுரைகளுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

...றும் அறிந்த உண்மை மனிதருக்குள் மாணிக்கமான இவர், தற்காலத்து இளம் ஆசிரியர்களுக்கு ஓர் வழி...

...ருகும். ... வாழ்வுக்கு இறைவன் ஆசிர்வதிப்பாராக.

—ஏ பி. அந்தோனிப்பிள்ளை

...எல்லைக்குட்பட்ட அத்தோலிக்க பாடசாலைகளில் 4 ம் 6 ம் 7 ம், 8 ம் வகுப்புகளுக்கு நடைபெறவிருக்கிறது.


# தலைவலி, நோவுகளைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




## டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

**டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்**
தலைவலி, நோவுகளுக்கான மருந்துகள் அதிதுரித நிவாரணம் தர வேண்டும். டிஸ்பிரின், கரையக் கூடிய அஸ்பிரின் கொண்டதாகையால் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது.

**எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்**
டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால், மற்ற மருந்துகள் போல உடம்புக்குப் பாதகமான கரையாத துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதகமான சேர்பொருள்கள் எதுவும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

**டாக்டர்கள் சிபாரிசு செய்வது டிஸ்பிரின்**
உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள், அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் அதி சிறந்த வலி நிவாரணிகளில் ஒன்று டிஸ்பிரின் என்பது அவர்களுக்கு அனுபவத்தில் தெரியும்.

**தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரித நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.**

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.
குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

P.91/99 — றெக்கிட் அண்ட் கோல்மன் உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்னடிமுனையில் அப்பலோ-14

கேப்கென்னடி, நவ. 9 அடுத்த வருடம் ஜனவரி மாதம் 31ந் திகதி சந்திரனுக்கு அனுப்பப்படவிருக்கும் அப்பலோ 14 ராக்கெட்டை நேற்று கேப்கென்னடி ஏவுகணைத் தளத்திற்குக் கொண்டுசென்றனர். இந்த ஏவுகண 36 அடுக்குகளைக் கொண்டது. இந்த ஏவுகணையை அமைப்புப் பட்டறையில் இருந்து ஏவுகணைத்தளத்திற்கு எடுத்துச் செல்வதற்கு ஐந்தரை மணி நேரம் பிடித்தது. இம்முறை அனுப்பப்படும் அப்பலோ-14ல் பயணம் செய்பவர்களில் இருவர் சந்திரவில் தரை இறங்க முயல்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அரச மொழித் தேர்ச்சி இல்லாவிட்டாலும்'

## பதவி உயர்வுப் பரீட்சைக்கு தடை விதிக்கக்கூடாது'

கொழும்பு, திங்கள் 'அரசகரும மொழியில் தேர்ச்சி பெறுமல் இருப்பதலோ அன்றேல் குறிப்பிட்டகால எல்லைக்குள் அரசகரும மொழியில் தேர்ச்சி பெறத்தவறியமைக்காகவோ ஒருவரை அரசாங்கத் திணைக்களபதவி உயர்வுப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு தடை விதிக்கக்கூடாது'

பொது நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்காவிற்கு அஞ்சல் தொலை தொடர்புச் சேவையாளர் சங்க செயலாளர் திரு. ஏச். சி. போகம் அனுப்பிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது இப்படிப்பட்ட பதவி உயர்வுப் பரீட்சைகளுக்கு சிங்கள தேர்ச்சி தவிர ஏனைய தேவையான தகைமைகள் யாவும் ஒருவரிடம் இருக்குமாயின் அவரை அப்பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்க வேண்டும்

''சிங்களச் சோதனைகளில் தேர்ச்சி அடையாதோருக்குத் தண்டனையாக அவர்களுக்கு வேதன உயர்வு வளங்கப்படவில்லை. மேலும் இப்படியான பதவிஉயர்வுச் சோதனைகளில் சிங்களத்தில் சித்தியடையாதமைக்காக அவர்களைத் தடுத்தல் மேலும் மேலும் ஒரே தவறுக்கு பல தண்டனைகள் கொடுப்பதற்கு ஒப்பாகும். ஆகவே முன்னர் 'முதலாவது வினைத்திறமைகாண் தடைச் சோதனைக்கு' குறிக்கப்பட்ட வேதன உயர்வு நியதி நீக்கப்பட்டது போல இச் சோதனைக்கும் இவ் வேதன உயர்வு நியதி நீக்கப்பட வேண்டும்.'' அஞ்சல் அதிபர்கள் வாழ்வில் 'பொறுப்புப்' பரீட்சை மிகமுக்கியதொன்ருகும். இப்பரீட்சையில் சித்தியடைந்த ஒருவரே அஞ்சலகமொன்றிற்குத் தலைமை அஞ்சல் அதிபராக விளங்கமுடியும். ஆகவே இவர்களது வளமான வருங்காலத்தைச் சிதைக்காது அவர்களையும் இச் சோதனையில் தோற்ற அனுமதிக்க வேண்டும்.

## இம்மாத முடிவில் 54 இ. போ. ச. அதிகாரிகள் வேலை இழப்பர்

கோட்டை, திங்கள் தேர்தலுக்குப் பின்னர் கட்டாய ஒய்வில் அனுப்பப்பட்டுள்ள 54 இ. போ. ச. அதிகாரிகள் இம்மாத இறுதியில் தங்கள் வேலையை இழப்பர்.

இவர்களில் 24 பேர் இ. போ. ச தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்தவர்கள். கள் தலைமைக் காரியாலயத்தின்மேல் கல்லெறிந்து ஆர்ப்பாட்டம் செய்ததைத் தொடர்ந்து சட்டாயலீவில் இவர்கள் அனுப்பப்பட்டது தெரிந்ததே. கடந்த சில மாதங்களாக இந்த அதிகாரிகளுக்கு அவர்களது சம்பளம் வீட்டுக்கு அனுப்பப்பட்டது.

# எகிப்து- லிபியா- சூடான் கூட்டுத்தலைமைக்கு இணக்கம்

# அரபு வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் திட்டம்

கெய்ரோ, நவ. 9

ஐக்கிய அரபுக்குடியரசு லிபியா சூடான் ஆகிய மூன்று நாடுகளும் அரசியல் ரீதியாக ஒன்று சேர்ந்து கூட்டாக இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இணங்கியுள்ளன. மூன்று நாடுகளின் ஜனாதிபதிகளும் கெய்ரோவில் கூடி ஆலோசனை செய்த பின்பே இம்முடிவு எடுக்கப்பட்டது.

ஐக்கிய அரபுக் குடியரசு லிபியா சூடான் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகள் கெய்ரோவில் கூடி அரபுப்பிரதேசங்களின் பாதுகாப்புக் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். அரபுப்பிரதேசங்களின் பாதுகாப்புக்காகவும் வளர்ச்சிக்காகவும் இம் மூன்று நாடுகளும் அரசியல் ரீதியாக ஒன்றிணைந்து செயல்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கமுடிவு செய்யப்பட்டதாகப் பேச்சுவார்த்தையின் பின் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: மூன்று நாடுகளும் சேர்ந்து கூட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு முன்னுல் அதுபற்றியும் பல்வேறு அம்சங்கள் பற்றியும் ஆராய உயர்நிலைக்கமிட்டிகள் நியமிக்கப்படும்,

அரபு மக்களின் ஒருமைப்பட்ட சின்னமாக காலஞ்சென்ற ஜனதிபதி நாசர் விளங்கினுர் அவரது லட்சியத்தை நடைமுறைப்படுத்தி அரபு மக்களை சுபீட்சமான பாதைக்கு அழைத்துச் செல்வதற்கு அரபுநாடுகள் ஒன்றுபடுவது அவசியம்.

இந்த மூன்று நாடுகளும் அரசியல் பொருளாதாரம் இராணுவம் கலாச்சாரம் ஆகியவற்றில் ஒன்றுபட்டு செயல்படும் எனத் தெரியவருகிறது. இந்த மூன்றுநாடுகளும் கூட்டுச் சேரும் பட்சத்தில்இந்நாடுகளின் ஜனாதிபதிகள் மூவரினதும் கூட்டுத் தலைமையின் கீழ் இந்நாடுகள் இயங்கிவரும்.

### லிபியாகண்டனம்

அமெரிக்காவும் இஸ்ரேலும் அரபுப் பிரதேசங்களை கைப்பற்றவே விரும்புகின்றன என்றுலிபியாவின்யுத்த அமைச்சர் பத்திரிகையாளர் மகாநாடொன்றில் கருத்து வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- காங்கோவிலும் தென்வியட்நாமிலும் அமெரிக்காஎவ்வித செயல் முறைகளைக்கடைப்பிடித்ததோ அதே மாதிரியான செயல் முறையைத் தான் மேற்காசிப்பிரச்னையிலும் செய்துவருகிறது எனக் குற்றஞ்சாட்டினுர்.

# 'சாஸ்திரி மரணத்தில் மர்மம் இல்லை'

திருமதி இந்திரா

புதுடில்லி, நவ. 9 காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் மரணத்தில் எவ்வித மர்மமும் இல்லை.

அவர் மேலும் தெரிவித்ததாவது: சாஸ்திரியின் மரணத்தில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லையென டாக்டர்கள் ஊர்ஜிதம் செய்

### அதிசயமான குழந்தை

திருச்சி, நவ. 9 ஜெயங்கொண்டாம் அருகே உள்ள ஆனைகுண்டம் என்ற கிராமத்தில் 25 வயதான பாப்பாம்மயள் என்பவருக்கு இரண்டு முகத்துடனும், நான்கு கைகளுடனும், நான்கு கால்களுடனும் கூடிய ஒரு குழந்தை பிறந்தது. இரண்டு குழந்தைகள் ஒட்டிப் பிறந்தது போல் காணப்பட்டது. பிறந்த சிறிது நேரத்தில் குழந்தை இறந்துவிட்டது.

......

### அமைச்சர் எச்சரிக்கை

கோட்டை, திங்கள் 'மாணவர்களைப் பாடசாலையில் சேர்ப்பதற்குப் பெற்ருேரிடம் தவருன வழியில் பிரச்சாரம்செய்யப்படும் எந்தவொரு தலைமை ஆசிரியரும் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்''

இத்தகவலை நேற்று கல்வி அமைச்சர் ஜனுப் பதியுதீன் மஹ்மூத் சகல பாடசாலைத் தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவித்துள்ளார்.

தம்மையோ, உதவி அமைச்சரையோ நிரந்தரக் காரியதரிசியையோ அல்லது கல்வி அமைச்சின் அதிகாரிகளையோ சந்தித்து அவர்களுடைய அதிகாரத்தைப் பெற்றுவரும்படி தலைமை ஆசிரியர்கள் பெற்ருர்களை அனுப்பக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

### இஸ்ரேல் மந்திரிசபையில் விவாதம்

டெல்அவிவ் நவ. 9 மேற்காசியப் பிரச்னை பற்றி விவாதிப்பதற்கு இஸ்ரேலிய மந்திரி சபை கூடியது மேற்காசிய சமாதானப் பேச்சு வார்த்தையில் சில நிபந்தனைகளை விதிப்பதாக முடிவு செய்யப்பட்டது ஆனல் இம்முடிவு பற்றி மந்திரிசபையில் ஒருமுகப்பட்டகருத்து ஏற்படவில்லை என்றுஏஜன்சி செய்திகள் கூறுகின்றன.

......

### இஸ்ரேலில் அராபியர் மூவருக்குத் தண்டனை

ஜெருசலேம், நவ 9 இஸ்ரேலில் அராபியர் ஒருவருக்கு மரணதண்டனையும். இரண்டு பேருக்கு ஆயுள்தண்டனையும் விதிக்கப்பட்டது.

சென்ற வருடம் ஜெருசலேம் பகுதியில் குண்டொன்று வெடித்ததை ஒட்டி இவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு படுத்தப்பட்டனர் இப்பொழுது இவர்களுக்கு இஸ்ரேல் நீதிமன்றம் இத்தண்டனையை வழங்கியுள்ளது.

......

### பிரதான வீதியில் கடல் நீர்

வேலணை, திங்கள் 'ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதிக்குச் செல்லும் பண்ணை பிரதான வீதிக்கு மேலாக கடல்நீர் பாய்வதால் இவ் வீதியால் பஸ்கள், லொறிகள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் செல்லமுடியாதிருக்கிறது

இவ் வீதியில் ஒவ்வொரு வருட கடல் பெருக்கேற்படும் போதும் இந்நிலை ஏற்படுவதுண்டு. இதனுல் கார் முதலிய வாகனங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன வெளியூர்களிலிருந்து நயினுதீவு போன்ற இடங்களுக்கு யாத்திரை மேற்கொள்பவர்களும், மற்றும் பிரயாணிகளும் இதனுல் பெரிதும் சங்

# நிக்சனுக்கு எதிராக சதியா? நிபுணர்கள் துப்புத்துலக்குவர்

கலிபோர்னியா, நவ. 9 அமெரிக்க ஜனதிபதி நிக்சனுக்கு எதிராக சதி நடவடிக்கைகளை யாராவது மேற்கொண்டிருக்கிருர்களா என்பதை இப்பொழுது அமெரிக்கத் துப்பறியும் நிபுணர்கள் ஆராய்ந்துவருகின்றனர்.

சில நாட்களுக்கு முன் அதிபர் நிக்சன் கலிபோர்ணியாவிற்கு விஜயம்செய்தார். அப்பொழுது அவரது விஜயத்தை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்பட்டது. இவ்வார்ப்பாட்டத்தின் போது சில அசம்பாவித சம்பவங்களும் நடைபெற்றன. இதனையொட்டியே அமெரிக்கத் துப்பறியும் நிபுணர்கள் சதி நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

## வைத்தியம் பார்க்கும் இயந்திர டாக்டர்

லண்டன, நவ. 9 நோயாளிகளின் வியாதிகளை நுணுக்கமாகப் பரிசோதனை செய்து நோயின் தன்மையைக் கண்டுபிடிக்கும் மின்கணித இயந்திரம் ஒன்றை பிரிட்டிஷ் வைத்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிருர்கள் இந்த நுட்பமான சாதனம் 'இயந்திர டாக்டர்' என அழைக்கப்படுகிறது. கிளாஸ்கோ நகரிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் இந்த அதிசய இயந்திரம் இயங்கிவருகிறது.

இந்த இயந்திரத்துடன் இணைந்தாற்போல் ஒரு தட்டெழுத்துக்கருவி உள்ளது. 'இயந்திர டாக்டர்' கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் நோயாளிகள் தட்டெழுத்துக் கருவியிலுள்ள பொத்தான்களை அழுத்தி பதில் சொல்ல வேண்டும் முதலில் 'உங்களிடம் நான் சில கேள்விகளைக் கேட்பேன். ஆம் அல்லது இல்லை என்ற பொத்தான்களை மட்டும் அழுத்தினுல் போதும்' என்று அவ்வியந்திரம் பேசும். இதனையடுத்து நோய் சம்பந்தப்பட்ட பல வினுக்களையும் எழுப்பும். 'வயிற்றில் ஏதாவது நோவு உண்டா? வயிற்றின் எந்தப் பக்கத்தில்? கடுமையான நோவா? அஜீரணம் ஏற்படுவதுண்டா?' இப்படி எண்ணற்ற கேள்விகளை அடுக்கி நோயாளியின் வியாதியின் தன்மைகளை அறிந்துவிடுகிறது இவ்வியந்திரம். தனது பரிசோதனை முடிவில் நோய்விபரப் பட்டியல் ஒன்றை இவ்வியந்திரம் வழங்கிவிடுகிறது.

பிரிட்டிஷ் தேசிய உடலியல் ஆய்வு கூடத்தைச் சேர்ந்த மனவியல் நிபுணரான டாக்டர். கிரீஸ்ஈவன், கிளாஸ்கோ சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் வில் பிரட்காட் இருவரும் கூட்டாகச் சேர்ந்து இந்த அதிசய 'இயந்திர டாக்டரைப்' படைத்திருக்கிருர்கள்.

''ஒருநாள் கெடு கொடுத்திருந்தால்

### அதிகபலன் கிடைத்திருக்கும்''

கோட்டை. திங்கள் ''50,100 ரூபா நோட்டுகள் ஒரே தினத்தில் செல்லாக்காசாக்கப்பட்டிருந்தால் நிதியமைச்சர் எதிர்பார்த்ததைவிட அதிக பலன் கிடைத்திருக்கும்''

இவ்வாறு ஹபரதுவை எம். பி. திரு, பிரின்ஸ் குணசேகரா ஹீனட்டிகல என்ற இடத்தில் நடைபெற்றகூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'கோடிக்கணக்கான ரூபா பணத்தைப் பதுக்கிக்கொண்டுள்ளோரின் செல்வத்தை வெளியே எடுத்து அதன் மூலம் நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களை உண்டுபண்ணிவேலையின்றி அலையும் படித்த இளைஞர்களுக்கு வேலை வசதிகளைச் செய்து கொடுக்கவே இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது'' என அவர் மேலும் பேசுகையில் சொன்னுர்.

......

### போதனு வகுப்பும் கருத்தரங்கும்

அம்மன், திங்கள் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. ச. சமாசம் அண்மையில் கூட்டுறவுப்பணியாளருக்கும் சங்க நிர்வாகிகளுக்கும் போதனுவகுப்பினையும், கருத்தரங்கினையும் பளைமகாவித்தியாலயத்தில் நடத்தியது. பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி மேற்படி சமாசத் தலைவர், வ.ஐ. மே. சபைத் தலைவர். தென். யாழ்ப்பாணப் பகுதி கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர், காரியாலயப் பரிசோதகர், வட்டார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகள் இம்மாத இறுதியில் தங்கள் வேலையை இழப்பர்.

இவர்களில் 24 பேர் இ. போ. ச தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்தவர்கள். மிகுதிப்பேர்வெளி"டங்களிலுள்ள டிப்போக்களில் கடமையாற்றுபவர்களாவர்

தேர்தல் முடிந்ததும் இவர்களை வெளியேற்றும்படி இ போ ச. ஊழியர் இவர்கள் அனுப்பப்பட்டது தெரிந்ததே. கடந்த சில மாதங்களாக இந்த அதிகாரிகளுக்கு அவர்களது சம்பளம் வீட்டுக்கு அனுப்பப்பட்டது.

இவர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்படுவதற்கு நஷ்டஈடாக 3 மாத சம்பளத்தை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது,

## துப்பாக்கிப் பாவனை விதிகள் திருத்தப்படும்!

கொழும்பு, தி கள்

துப்பாக்கிகளை இலகுவாகப் பெறவியலாத வகையில் துப்பாக்கிப் பாவனை விதிகள் திருத்தியமைக்கப் படுகின்றது

லைசன்ஸ் இன்றி ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் மீதும்சடும் நடவடிக்கையும் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளை, கொலை ஆகியவற்றுக்குத் துப்பாக்கிகளைப் பாவித்தல் அதிகரித்துவருவதாகப் பொலிஸ் அறிக்கை ஒன்று தெரிவித்ததைத் தொடர்ந்தே அரசாங்கம் மேற்படி நடவடிக்கையை எடுக்கத் தீர்மானித்துள்ளது. (சி.பி.ஏ)

## விளையாட்டு உத்தியோகத்தர் இடமாற்ற விபரம்

யாழ்ப்பாணம், செவ்.

விளையாட்டு அமைச்சின் இடமாற்ற உத்தரவுகள் 1-1-71 தொடக்கம் புதிய காரியாதிகாரி பிரிவுகளுக்குச் செல்லும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் வருமாறு;

தெல்லிப்பழை காங்கேசன்துறைப் பகுதியிலிருந்து திரு ஜே. கந்தசாமி செட்டிகுளத்திற்கும், கிளிநொச்சியிலிருந்து திரு. சி. கந்தசாமி தெல்லிப்பழை - காங்கேசன்துறைப் பகுதிக்கும், வவனியாத் தமிழ்ப்பகுதியிலிருந்து திரு. ஜே. நடராஜா அக்கரைப்பற்றிற்கும், நாவலப்பிட்டியிலிருந்து திரு. எஸ். செல்வராசா வவனியா தமிழ்ப்பகுதிக்கும், வவனியாக் கச்சேரியிலிருந்து திரு எஸ். ஜே. சவுந்தரநாயகம் சம்மாந்துறைக்கும் மாற்றப்பட்டுள்ளார். திருகோணமலையிலிருந்து எஸ் இரத்தினசபாபதி கல்முனைக்கும் குச்சவெளியிலிருந்து எஸ் டி கிருபைநாயகம் திருமலைக்கும் அனுராதபுரத்திலிருந்து திரு சுப்பிரமணியம் சங்கானைக்கும், சங்கானையிலிருந்து கே. அரிச்சந்திரா கிளிநொச்சிக்கும், திரு. எஸ். ஆர். கந்தையா கோலையிலிருந்து ரம்புக்கணைக்குமாற்றப்பட்டுள்ளார்களாம் கரவெட்டியிலிருந்து திரு. கே. கார்த்திகேசு முல்லைத் தீவிற்கும், முல்லைத்தீவிலிருந்து திரு. என். தியாகராசா கரவெட்டிக்கும், திரு, கே. சம்பந்தர் கந்தளாயிலிருந்து குச்சவெளிக்குமாற்றப்பட்டுள்ளார்கள். (தே. நி)

## வானொலியில் சமயச் சடங்கு

பண்டத்தரிப்பு, திங்கள்

எதிர் வரும் 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் திவ்வியபூசை சமயச் சடங்கு நிகழ்ச்சி காலை 7-30 முதல் 8-15 வரை நடைபெறவிருக்கிறது சங். சகோ தோமஸ் பர்னான்டோ இந்த நிகழ்ச்சியை நடாத்துகிறார். புனித அந்தோனியார் பாடற் குழுவினரும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுகின்றனர்.

## கட்டாக்காலி மாடுகள்

மன்னார், திங்கள்

மன்னார் பட்டினசபை எல்லைக்குள் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்திருப்பதாக பட்டின சபைக்கு மக்கள் புகார் செய்துள்ளனர்.

## உயர்பீட இடமாற்றம்

மன்னார், திங்கள்

மன்னார் ஆஸ்பத்திரி, பொலிஸ் நிலையம், கச்சேரி ஆகியவைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இவ்வருட இறுதியில் இடமாற்றம் பெறவிருப்பதாக அறியப்படுகிறது.

## திருமதி இந்திரா

புதுடில்லி, நவ. 9

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் மரணத்தில் எவ்வித மர்மமும் இல்லை.

லால்பகதூர் சாஸ்திரியின் மரணம் குறித்து விசாரிக்க, விசாரணைக் கமிஷன் நியமிக்கவேண்டுமெனக் கோரி, பார்லிமெண்ட் எதிர்க்கட்சிக் காங்கிரஸ், கொண்டுவந்த தீர்மானத்தையொட்டி பார்லிமெண்ட் நிர்வாகக் குழுவில் பிரதமர் இந்திரா காந்தி பேசுகையில் மற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது: சாஸ்திரியின் மரணத்தில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லையென டாக்டர்கள் ஊர்ஜிதம்செய்தனர். சாஸ்திரி மரணம் அடைந்த நேரத்தில் இவ்வித குற்றச்சாட்டுகளை யாரும் தெரிவிக்கவில்லை. எனக்கும் எனது அரசாங்கத்திற்கும் எதிராக மக்கள் மனத்தில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தவே அவர் மரணமாகிய ஐந்து வருடத்தின் பின் இவ்வித தவறான கருத்தை எதிர்க்கட்சியினர் சொல்லி வருகின்றனர் என்றார்.

## லண்டனில் நடைபெற்ற சர்வமத மகாநாடு

லண்டன், நவ-9

'வாழ்க்கைவேறு மதம் வேறு அல்ல வாழ்க்கைக்கும் மதத்திற்கும் ஒத்திசைவான நெருங்கிய தொடர்புண்டு இஸ்லாமின் ஆத்மீகத் தத்துவத்தில் மதத்திற்கும் அரசியலுக்கும் அல்லது மதத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் வேறுபாடு கிடையாது வாழ்க்கையின் சகல அம்சங்களையும் இஸ்லாம் தழுவி நிற்கிறது'.

இவ்வாறு பாகிஸ்தானின் பிரபல அறிஞரும், ஹேக் நகரிலுள்ள சர்வதேச நீதிமன்றத் தலைவருமான சேர் ஜபருல்லா கான் இங்கிலாந்தில் அண்மையில்நடைபெற் சர்வதேச மகாநாட்டில் உரைநிகழ்த்துகையில் கூறினார். தென்இங்கிலாந்தில் உள்ள குரே சர்வகலாசாலையில் விமரிசையான முறையில்நடைபெற்ற இம்மாநாட்டில் இந்துமதம், பௌத்தம். இஸ்லாம் கிறிஸ்தவ மதப்பிரிவுகள், சீக்கியமதம், யூதமதம் போன்ற பல்வேறு சமயங்களைச்சேர்ந்த ஆத்மீக அறிஞர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

'மாறிவரும் உலகில் உலக மதங்களின் பங்கு' என்பது தான் இம்மாநாட்டின் பேச்சுப்பொருள். பல் வேறு உலகநாடுகளிலிருந்து அழைக்கப்பட்ட அறிஞர்கள் தத்தம் மத சித்தாந்தங்களை விளக்கியதுடன், அராஜகமும் பலத்காரமும் மிகுந்துவரும் இவ்வுலகில் சமாதானமும் மனுநீதியும் நிலவவேண்டியதன் அவசித்தையும் வலியுறுத்தினர்.

இம்மாநாட்டில் ஆரம்ப உரை நிகழ்த்திய சேர் ஜபருல்லர் கான் இஸ்லாம் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் உன்னத மதமாக விளங்கிவருகிறது என்றார்.

லண்டனிலுள்ள இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ பீ. பந்த், இந்துமத தத்துவ தரிசனங்கள் பற்றி விளக்குகையில் பற்றற்ற நிலையின் மகத்துவத்தையும் மனோசாந்திக்கு இதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். பொருளாசையும் அதிகார மோகமும் நிறைந்த இவ்வுலகிற்கு பற்றற்ற நிலைதான் அமைதியை அளிக்க முடியும் என்றார் அவர்.

பௌத்த பிக்குவான வண. கேன்தாஸ பேசுகையில், பௌத்த தியான நிலைகள்பற்றி எடுத்து விளக்கினார். நெதர்லாந்தைச் சேர்ந்த கிறிஸ்தவ பாதிரியான டாக்டர் போவீக் பேசுகையில் சகல மதங்களும் ஒன்றிணைந்து மனித குலத்திற்கு சேவையாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். யூதமதக் குருவான டொவ் மாமூர் தமது உரையில் மனித அறநெறிகளையும் தர்மங்களையும் மதங்களால்தான் காப்பாற்ற முடியும் என்று கூறினார்.

## ஒற்றைத்தட்டு பஸ்ஸிலும் 2 கண்டக்டர்கள்

கோட்டை திங்கள்

இலங்கைபோக்குவரத்துச் சபை ஒற்றைத்தட்டு பஸ்களுக்கும் இரண்டு கண்டக்டர்களை பரீட்சார்த்தமாக நியமித்துள்ளது.

டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்வோரைக் கண்காணிக்கும் பிரயாணிகளின் வசதிகளைச் சுமுகமாக் இந்த நடவடிக்கையை சபை மேற்கொண்டுள்ளது.

கல்வி அமைச்சின் அதிகாரிகளையோ சந்தித்து அவர்களுடைய அதிகாரத்தைப் பெற்றுவரும்படி தலைமை ஆசிரியர்கள் பெற்றோர்களை அனுப்பக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

முதலிய வாகனங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன வெளியூர்களிலிருந்து நயினைதீவு போன்ற இடங்களுக்கு யாத்திரை மேற்கொள்பவர்களும், மற்றும் பிரயாணிகளும் இதனல் பெரிதும் சங்கடத்துக்குள்ளாகின்றனர்.

ந்த மனவியல் நிபுணரான டாக்டர். கிரீஸ்ாவன், கிளாஸ்கோ சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் வில் பிரட்காட் இருவரும் கூட்டாகச் சேர்ந்து இந்த அதிசய 'இயந்திர டாக்டரைப்' படைத்திருக்கிறார்கள்.

வித்தியாலயத்தில் நடத்தியது. பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி மேற்படி சமாசத் தலைவர், வ. ஐ. மே. சபைத் தலைவர். தென். யாழ்ப்பாணப் பகுதி கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர், காரியாலயப் பரிசோதகர், வட்டாரப் பரிசோதகர், மேற்பார்வைப் பரிசோதகர் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# சீன விரோதக் கொள்கையை இந்தியா கைவிடவில்லையாம்

ஹாங்காங், நவ. 9

கம்யூனிஸ்ட் சீனவுடனான தனது விரோதக் கொள்கையை இந்தியா இன்னமும் கைவிடவில்லை அது தனது கொள்கையிலிருந்து மாறுதல் எதையும் செய்யவில்லை என சீன இந்தியா மீது குற்றம் சாட்டியுள்ளது.

நவசீன செய்தி ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: சீனவுடன் இந்தியா நட்புறவுடனும் சமாதானத்துடனும் இருக்கவேவிரும்புகிறது என இந்தியா சொல்லிவந்த பொழுதிலும், அதன் முன்னைய சீனவுக்கு எதிரான விரோதக் கொள்கையிலிருந்துஎள்ளளவும் மாறவில்லை. தீபெத் அகதிகளின் சீனவுக்கெதிரான விரோதச் செயல்களுக்கும், சீனவை எதிர்க்கும் சீன விரோத ஆர்ப்பாட்டங்களுக்கும், தைவான் அதிகாரிகளுடன் இந்த ஆர்ப்பாட்டம் செய்யும் இந்தியர்கள் உடந்தையாயிருப்பதற்கும்மறைமுகமான ஆதரவை இந்தியா கொடுத்துவருகிறது. கடந்த மாதம் இந்தியத் தலைநகரில் சியாங்சீன இந்தியா நட்புறவு வாரம் கொண்டாடப்பட்டதைச் சுட்டிக்காட்டிய அவ்வறிக்கைஇவ்வித நட்புறவு வாரங்கள் சீனவை ஆத்திரமூட்டுவதாகும் என்றுகூறியுள்ளது.

இந்திய ஆட்சிமன்ற அங்கத்தவர்களில் 150 பேர் தைவானுடன் ராஜதந்திர உறவை ஏற்படுத்துமாறு கோரி ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர்.

தருமசாலாவில் தீபெத் இளைஞர்கள் மகாநாடு நடத்தினர். இவையாவும் சீன விரோதக்கொள்கையில் இந்தியா எவ்வித மாற்றத்தையும் செய்யவில்லை என்பதையே காட்டுகிறது என அச்செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்தியாவுடன் சீன தன் உறவை அபிவிருத்திசெய்ய விரும்புகின்றது என்று செய்தி வெளிவந்துகொண்டிருக்கும் இந்நேரத்தில் இந்தியா மீது இக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## எம். பி. க்களுக்கு கார் இறக்குமதி

### அரசு தீர்மானம்

கோட்டை. திங்கள்

கார் வாங்க விரும்பும் எம் பி க்களைத் தம்மிடம் அறிவிக்குமாறு ஆட்சிமன்ற விவகார அமைச்சர் திரு. கே பி ரத்னயக்கா கேட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவருக்கு அதிகாரபூர்வமாகக் கார் வழங்கவும், மற்றும் எம். பி. க்களுக்கு பிரான்சிலிருந்து கார்கள் இறக்குமதி செய்யவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## எம். பி. காருக்கு குண்டுவீச்சு

கோட்டை, திங்கள்

வென்னப்புவ ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஜஸ்டின் பொன்சேகாவின் காருக்குக் கைக்குண்டு வீசப்பட்டதாக அவர் கொஸ்வத்தை பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து இதுசம்பந்தமாக நால்வர் கைதுசெய்யப்பட்டனர். மகாநாடொன்றில் கலந்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருக்கையில் இச்சம்பவம் நடைபெற்றதாகத் தெரிகிறது.

## திடீர் மரணம்

மன்னார், திங்கள்

கடையில்சாமான் வாங்கச் சென்ற தேவதாஸ் என்பவர் திடீரென மயக்கமுற்று வீழ்ந்து மரணமானார்

## 154 பேர் மட்டுமே வேலைபெற்றனர்

கோட்டை, திங்கள்


இலங்கை வேலைவாய்ப்புக் கந்தோரில் பதிவுசெய்யப்பட்ட 30,000 பேரில் 154 பேர் தொழிலில் அமர்ந்துள்ளனர். மிகுதியானோர் வேலைவாய்ப்புப்பட்டியலில் காத்துநிற்கின்றனர்.

இத்தகவலை தொழிலிலாகாவின் தொழில் வர்த்தமானி தெரிவித்துள்ளது.


"செவன"



கூரை ஓடுகள்



* "செவன" ஓடுகள் (இரண்டாம் தரத்திலுள்ளவைகள்) இப்போ சுன்னுகம் மரத்தளபாடத் தொழிற்சாலையில் பெற்றுக் கொள்ளலாம்.
* இவ் ஓடுகளை மிகவும் சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். 1,000 ஓடுகளின் விலை ரூபா 375/-மாத்திரமே.
* செலவைக் குறைப்பதற்காக கட்டிட வேலை செய்பவர்கள் பெரும்பாலும் இவ் ஓடுகளையே உபயோகிக்கின்றனர்.

விசாரணைகள்:-

முகாமையாளர்

தேசிய சிறுகைத்தொழிற் கூட்டுத்தாபனம்

(மரத்தளபாடத் தொழிற்சாலை)

சுன்னுகம்.

தேசிய சிறுகைத்தொழிற் கூட்டுத்தாபனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மேல்நாடுகளில் ஒரு மனிதன் எவ்வளவு பொருளை சம்பாதிக்கலாம் என்னும் பிரச்னைக்கு முடிவு காணவே முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் நாம் இங்கு எவ்வளவு சிக்கனமான முறையில் வாழ்க்கை நடத்தமுடியும் என்பதைக் கண்டு பிடிக்கவே முயற்சிசெய்துவருகிறோம்.

— விவேகானந்தர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna: Telephone: 889;

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 24-ந் திகதி (10-11-70)


## கட்டுபெத்த சம்பவம்

கட்டுப்பெத்த தொழில் நுட்பக்கல்லூரியில் ஆர்ப்பாட்டமும் கைகலப்பும் ஏற்பட்டதைத் தொடர்ந்து அக் கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகமாக இருக்கும் இக்கல்லூரி மூடப்பட்டிருப்பதோ அங்கு நடந்த சம்பவங்களோ யாருக்கும் மகிழ்ச்சியளிக்க முடியாது. மாணவர்கள் குழப்பம் செய்தார்களென்றும் நிலைமையைச் சமாளிப்பதற்காக பொலிசார் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் செய்யநேரிட்டதென்றும் செய்திகள் கூறுகின்றன. இறைவனுக்குச் சமமான எழுத்தறிவிக்கும் ஆசிரியர்களையும் கல்லூரி அதிபரையும் தாக்கிக் காயமேற்படுத்துமளவிற்கும் தமக்கு கல்வியறிவூட்டும் கல்விக்கூடத்தை சேதப்படுத்துமளவிற்கும் நமது மாணவர்கள் மோசமாக நடந்துகொள்வார்கள் என்பதை நம்பமுடியவில்லை. மாணவர்கள் என்ற போர்வையில் சில விஷமிகள் இந்தக் கிளர்ச்சிகள் ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் இருக்கலாமென்று சந்தேகப்படுவதில் நியாயமில்லாமலிருக்கமுடியாது.

என்றாலும் அரசியல் ஆதாயத்துக்காக எதையும் செய்ய முற்படும் தீவிரவாதிகளினதும் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தமுனையும் சமூக விரோத விஷமிகளின் முயற்சிகளிலும் மாணவர்கள் சிக்கிக்கொள்ளாமல் விவேகத்துடன் நடந்துகொள்ளவேண்டியது அவர்களின் பொறுப்பும் கடமையுமாகும்.

மாணவர்களின் தலையாய கடமை தங்கள் படிப்பில் கவனம் செலுத்துவதுதான். எதற்காக அவர்கள் கல்லூரியில் சேர்ந்திருக்கிறார்களோ அந்தக் கடமையைச் சீராகச் செய்து நிறைவேற்றி வெளியேறுவதுதான் அவர்களுடைய பொறுப்பு. அவர்கள் அரசியலை அறிந்து வைத்திருக்கவேண்டுமே யொழிய அரசியலில் அதுவும் கட்சி அரசியலில் ஈடுபடுவது அவர்களுக்கோ நாட்டுக்கோ நல்லதல்ல.

கட்டுபெத்த தொழில் நுட்பக்கல்லூரியில் இருபத்திமூன்று மாணவர்கள் ஒழுங்கற்றமுறையில் அனுமதிக்கப்பட்டார்களென்றும் இதை எதிர்த்தே மாணவர்கள் பகிஷ்கரிப்பும் கிளர்ச்சியும் நடத்தினார்களென்றும் கூறப்படுகிறது. மாணவர்கள் எப்படி அனுமதிக்கப்பட்டார்கள், இதில் ஒழுங்கீனம் நடந்திருக்கிறதா வென்பதையெல்லாம் அக் கல்லூரி மாணவர்கள் ஏன் தமது தலையில் தூக்கிச் சுமக்க வேண்டும்? கல்விமான்கள், ஆட்சிமன்றப் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோரிடம் இப் பொறுப்பை விட்டுவிட்டு மாணவர்கள் தமது படிப்பைக் கவனித்தால் இதுபோன்ற சம்பவங்களோ சங்கடங்களோ நேர இடமிருக்காது.

இதேசமயம் கல்லூரி ஆசிரியர்களும் அதிபரும் மாணவர் பிரதிநிதிகளை அடிக்கடி சந்தித்து அவர்களுடைய குறைநிறைகளை அறிந்து அதற்கான பரிகாரம் தேடினால் மாணவர் கிளர்ச்சிகள் ஏற்படவும், ஆசிரியர் அதிபர் தாக்கப்படவும் மனக்கசப்பு ஏற்படவும் கல்லூரி மூடப்படவும் சந்தர்ப்பம் ஏற்படாது.

கட்டுபெத்த சம்பவம்பற்றி விரிவான விசாரணைசெய்து இதுபோன்ற சம்பவங்கள் அங்கு மட்டுமல்ல நாட்டில் வேறு எங்குமே நிகழாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தாமதமின்றி மேற்கொள்ளவேண்

### மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# 'தலைவர் நினைத்தபடி தான் சபையில் எல்லாம் நடக்கிறது'

## பட்டினசபைச்செயலாளர் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ். மன்னார் பட்டினசபை அலுவல்கள் ஒழுங்கு முறைப்படி நடைபெறவில்லையென்றும் தலைவர் நினைத்தபடிதான் எல்லாம் நடந்துகொண்டு போகிறதென்றும், மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணையின்போது சாட்சியமளித்த மன்னார் பட்டினசபைச் செயலாளர் அ. வே. வெற்றிவேலு கூறினார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்றும் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டது. மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் இஸடீன் முகமட் குறுக்குவிசாரணை செய்தபோதே சாட்சியமளித்த வெற்றிவேலு மேற்கண்டவாறு கூறினார்.

குறுக்கு விசாரணையின்போது வெற்றிவேலு மேலும் கூறியதாவது:-

மன்னார் பட்டினசபையில் 68-ம் ஆண்டுமுதல் கடமையாற்றுகிறேன். அதற்குமுன் திருக்கோணமலை நகரசபையில் உதவிச்செயலாளராகக் கடமையாற்றினேன் 65-ம் ஆண்டிலிருந்து அங்குகடமையாற்றினேன், உள்ளூராட்சியின்கீழ் 20 வருடங்கள் கடமையாற்றினேன். பல விஷயங்கள்பற்றி தலைமைப் பீடத்திலிருந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு உத்தரவு வரும்.

வழ: சட்டதிட்டம் தெரிந்திருக்கவேண்டும்?- தேவையானவை தெரிந்திருக்க வேண்டும்.

வழ: தலைவருக்கு அடுத்து சபையில் முக்கியமானவர் செயலாளர்?- உபதலைவர்.

வழ: மெம்பர்கள் சபையில் நிரந்தரமாக இடம்பெறமாட்டார்கள்?- ஆம்.

உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக இருப்பார்கள்?- ஆம்.

... திருந்தீரா?- தெரிந்திருக்கவில்லை.

வழ: திருமலை நகரசபையில் நடைமுறையில் எப்படி நடந்து கொண்டார்கள்?- கூட்டத்திற்கு சென்றிருந்தால்தான் தெரிந்திருக்கும்.

வழ: தெரியுமா?- சாதாரணமாகத் தெரியும்.

வழ: ரெண்டர் பற்றி உமக்குதெரிந்திருக்கவேண்டும்?- ஆம்.

வழ. ரெண்டர் பத்திரத்திற்கு 15 ரூபாய் கட்ட வேண்டும்? ஆம்.

வழ: 100 ரூபா வைப்புப் பணம் கட்டவேண்டும்? ஆம்

வழ: ரென்டர் எடுக்காவிடில் வைப்புப்பணத்திற்கு என்ன நடக்கும்? கேள்வி விளம்பரத்தில்என்ன செய்ய வேண்டுமெனக் கூறப்பட்டிருக்கும்.

வழ: ஒவ்வொருவருடமும்பலர்ரென்டர்எடுப்பார்கள்? ஆம்.

வழ: தெரிவுசெய்யப்படாதவரின் வைப்புப் பணம் பற்றி உத்தரவு இருந்தால் உமக்குத் தெரியும்? விசேஷ உத்தரவென்றால் தெரியும்

நீதி: தெரிசெய்யப்படாதவர்களின் வைப்புப் பணம் என்ன செய்ய வேண்டும் என்று கமிஷனரின் உத்தரவு பற்றி தெரியுமா? தெரியும்

நீதி: என்ன தெரியும்? தெரிவு செய்யப்பட்டவர் பணம் கட்டியபின் மற்றவர்களின் பணம்திருப்பிக்கொடுக்கவேண்டும்.

நீதி: கமிஷனரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவா? ஞாபகமில்லை.

நீதி: தெரிவு செய்யப்பட்டவரின் வைப்புப் பணம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என உத்தரவு உண்டா? ஆம்.

நீதி: எப்பொழுது திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறதா? ஆம்

வழ: பணத்தைத் திருப்பிக் கொடுப்பது சபையின் கடமை? ஆம்

வழ: பணத்தைசபை வைத்...

நீதி: தெரிவுசெய்யப்படாதவர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படுமா? இந்தசபையில் அப்படிவழக்கம் இருந்ததாகத்தெரியவில்லை

நீதி: சுற்றறிக்கையின் பிரகாரம் தெரிவு செய்யப்படாதவருக்கு வைப்புப் பணம் திருப்பி அனுப்பப் படவேண்டும்? ஆம்.

நீதி; சுற்றறிக்கை கமிஷனரால் அனுப்பப்படும்? ஆம்.

வழ: எல்லா உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அவர் தலைவர்? ஆம்

வழ; சுற்றறிக்கை முக்கியமான பத்திரம்? ஆம்.

வழ: மிக மிக முக்கியமான பத்திரம்? ஆம்.

வழ: நீர் அதனை முக்கியமாகக் கருதினீரா? ஆம்.

வழ: எனவே அதனைக் கவனமாகப்படித்தீர்? வழக்கம் போல் அதையும் படித்தேன்.

வழ: அதில் ரென்டர் பற்றி முக்கியமானதைஞாபகத்தில் வைத்திருப்பீரா? ஞாபகத்தில் எல்லாவற்றையும் வைத்திருக்கமுடியாது தேவை யேற்படும் போது பார்ப்பேன்.

நீதி: எப்பொழுது சுற்றறிக்கையைப் படித்தீர்? ரென்தர் பற்றிய விஷயம் வந்தபோது

நீதி: 68ம் ஆண்டு முதல் அங்கு கடமையாற்றுகிறீர்? ஆம்.

நீதி: ஒவ்வொருமுறையும் ரெண்டர் வரும்போதுபடித்தீரா? லிகிதர் கொண்டு வந்துதருவார். தலைவர் கொடுத்துவிடுவார்.

நீதி: நான் இந்தச் சுற்றறிக்கைபற்றிக் கேட்கிறேன். நீர் சுற்றறிக்கையை கவனமாக வாசித்ததாக கூறியிருக்கிறீர். ஒரு தடவை வாசித்தீரா அல்லது பலதடவை வாசித்தீரா?- சில தடவை.

நீதி: எப்போ வாசித்தீர்?- சொல்ல முடியாது. 68-ம் ஆண்டு கடைசிப் பகுதியில்.

நீதி: எதற்காக வாசித்தீர்? ரெண்டர் விஷயம் பற்றி...

மன்னார் பட்டின சபையில் கடமையாற்றினீரா?- ஆம்.

வழ: மற்றும் அங்கத்தவர்களுக்கு அப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதா?- இல்லை

வழ: ரெண்டர் நோட்டீஸ் சபையினருக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்று தெரியுமா?- வழக்கம்போல் தலைவர் உத்தரவுப்படி லிகிதர் எழுதி என்னிடம் தருவார்.

வழ: 69ல் ரெண்டர்சமர்ப்பிக்கப்படவில்லை?- ஆம்.

நீதி: ரெண்டர் நோட்டீஸ் மற்ற அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை?- ஆம். ஏன் சபைக்கு சமர்ப்பிக்கவில்லை என தலைவரை கேட்டபோது அது தேவையில்லை, இதுதான் வழக்கமானது என்றார்.

வழ: அதுசரி என்று நினைத்தீரா?-வழக்கம் அப்படியிருந்தது.

வழ: நீர் எப்படி நினைத்தீர்?- தலைவருக்கு சொல்லுவேன். அதற்குமேல் எனக்கு அதிகாரமில்லை

வழ: என்ன நினைத்தீர்?- அங்குள்ள நிலபரம் எனக்குத்தெரியாது கடமைக்கு வந்து ஆரம்பகாலம்.

வழ: முக்கியமான விஷயமானால் புத்தகத்தில் எழுதுவீர் என்றீர்?- ஆம்.

வழ: ரெண்டர் நோட்டீஸ் முக்கியமானதல்லவா?- அந்த நேரம் முக்கியமானதாக கருதவில்லை.

வழ: எந்த நேரம்?- 68ல்.

வழ: அதற்கு பிறகு முக்கியமானதென்று கருதினீரா?- 69ல் தான் தலைவரை இரண்டாவது முறையாக கேட்டேன். இதுதான்வழக்கமானது என்றார்.

வழ; புத்தகத்தில் அவற்றை எழுதினீரா? - எல்லாவற்றையும் முக்கியமானதாகக் கருதமுடியாது, எல்லாவற்றையும் எழுதமுடியாது.

நீதி: தெரிவுசெய்யப்படாதவர்களுக்கு அறிவிக்கப்பட்டதா? -பைலைப் பார்த்துத்தான் சொல்லமுடியும்.

வழ: ஞாபகத்தில் இல்லை...

## ஜயாறன் எழுதுவது:

இரண்டு மாதங்களுக்குப் பிறகு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் திரும்பியதும் என் மனதுக்குஇங்கு ஒரு விஷயம் மிக மகிழ்ச்சி அளித்தது. என்ன தெரியுமா? வண்ணை சிவன் கோயில் கோபுரம் உயர்ந்து வரும் காட்சிதான். பல்லாண்டுகளுக்கு முன் இப்படிப்பட்ட கோயில் கோபுரம் மீண்டும் கட்டப்படவில்லையே என்று இங்குசைவ சமூகத்துக்குப் பெருங்குறையாக இருந்தது. இப்பத்தியிலே முன்னரும் இதுபற்றி எழுதியிருந்தேன்.

அங்கு கோயில் கொண்டுள்ள ஸ்ரீ பாலாம்பிகை சமேத வைத்திலிங்கேசப் பெருமான் இப்போதுதான் அருள் செய்துள்ளார். கோபுரம்தான் கோயிலுக்கும் ஊருக்கும் அழகு கொடுப்பது; பெருமையளிப்பது. தூரத்திலிருந்தும் தரிசனம் செய்யக்கூடியது கோபுரமில்லாத கோயில், தலையில்லாத உடலை ஒக்கும். தமிழக அரசின் விசேஷ முத்திரையிலும் கோபுரம்தான் இடம் பெற்றுள்ளது. இவ்வளவு காலமாக இருந்துவந்த இக்குறை நீங்கி, கோபுரம் மள மளவென்று அழகாக வளர்ந்து வருவதைக் காணப் பொதுமக்களும், சிறப்பாக சைவமக்களும் மகிழ்ச்சியடையக் காரணமுண்டு. இனியும் இது வீண் தவக்கமில்லாமல் கட்டிமுடிக்க அந்தப் பெருமான்தான் அருள் செய்ய வேண்டும்.

இந்தக் கோபுரம் கட்டி முடிந்தால் யாழ்ப்பாணத்தின் அழகும் பெருமையும் மட்டுமன்றி, தமிழரின் நிலையும் வளர்ந்தோங்க வழி பிறக்குமென்று என் உள்ளம் நம்புகிறது. இதற்குக் கூடுமான உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பவர்களுக்கு சிவ புண்ணியம் சேரும்.

0 0 0

அதிகாலையில் 'டப்பா'ப் பாட்டு ஒலிபெருக்கிமூலம் வந்து என்னை எழுப்பியது. பக்கத்திலே ஒரு வீட்டில் ஒரே விசேஷமென்றும் அங்கிருந்துதான் இந்தப் பேரொலி கிளம்பிவந்து, பலர் காதுகளையும் துளைப்பதாகவும் அறிந்தேன். அது மட்டுமல்ல, இந்த ஒலி ... என்று கூறிவிட்டதாக ஞாபகம். சில மாதங்களுக்கு முன் ஒருவீட்டில்ஏதோவிசேஷம். ஒலிபெருக்கியில் சங்கீதம் காதைத் துளைத்தது. எதிர் வீட்டை நோக்கியே ஒலி பெருக்கியின் வாயைத் திருப்பி வைத்திருந்தனர். அங்கு ஒரு பெரியவர் தங்கி இருந்தார் அவரைக் காண வந்து காத்திருந்தவர்கள் எல்லாரும் மனவேதனைப் பட்டனர். அந்த வீட்டாரைத் திட்டிச் சபித்தனர். அவர்களிடம் நேரில் சென்று ஒலிபெருக்கியின் வாயைத் தயவுசெய்து வேறு பக்கமாகத் திருப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டதும், அந்த வீட்டுத் தலைவர் உடனே அதை நிற்பாட்டி விட்டார். அவர் வாழ்க! பிறருக்கு இவ்வித ஒலி பெருக்கியால் தொல்லை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கல்யாண வீட்டாருக்குச் சிறிதும் இல்லை. தங்கள் வீட்டுக் கொண்டாட்டத்துக்கு இவ்வித சங்கீத விளம்பரம் அவசியமென்றும் பிறருக்கு இசையை இலவசமாகஅளிப்பது நன்மையாகுமென்றும் அவர்கள் கருதுகிறார்கள் போலும்! விஷயத்தை எடுத்துச் சொன்னால் அவர்களில் பலரும் ஒலிபெருக்கியை நிறுத்திவிடக்கூடும்.

இவ்விஷயத்தில் சட்டம் என்ன கூறுகிறதென்று தெரியவில்லை. 'டப்பா'ப் பாட்டுகளை சினிமாவிலும் பாடவிடப்படாதென்றும் இதனால் மக்களின் மனம் கெடுகிறதென்றும் இலங்கை வானொலியில் ஒரு கருத்தரங்கிலே வற்புறுத்தினார்கள். சினிமாப் பாட்டுகளை தணிக்கை செய்ய வேண்டுமென்று கூறினர். அப்படியிருக்க கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் இவ்வித பாடல்களை இரவுபகல் 'வான்வாளென்று' முழங்கச் செய்து, ஊரின் அமைதியையும் புனிதத்தையும் கெடுக்க அனுமதிப்பது பெரும் இம்சையாகும்.

யாழ்ப்பாணத்தின் சினிமா சாலைகளில் புகைக்கப்படாதென்று மாநகரசபையார் உத்தரவு போட்டதால் இங்கு படம் பார்க்கும் பெண் பிள்ளைகளுக்கு எவ்வளவோ நன்மையாகவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவேண்டியது அவர் களின் பொறுப்பும் கடமை யுமாகும்.

மாணவர்களின் தலையாய கடமை தங்கள் படிப்பில் கவனம் செலுத்துவதுதான். எதற்காக அவர்கள் கல் லூரியில் சேர்கிறார்களோ

விரிவான விசாரணைசெய்து இதுபோன்ற சம்பவங்கள் அங்கு மட்டுமல்ல நாட்டில் வேறு எங்குமே நிகழாமல் தடுப்பதற்கான நடவடிக்கை களை அரசாங்கம் தாமத மின்றி மேற்கொள்ளவேண் டியது அவசியம்.

## தர்மப்பணமும் நோட்டுக்களும்

சமூகசேவை இலாகா விடமிருந்து உதவிப்பணம் பெறுவோர் யாராவது இருநூற்றி ஐம்பதுரூபாய்க்கு மேற்பட்ட தொகை யில் பழைய நூறுரூபாய் ஐம்பது ரூபாய் நோட் டுக்களை மாற்றியிருந்தால் அவர்களின் உதவிப்பணம் நிறுத்தப்படுமென்று சமூகசேவை அமைச்சர் ஆட்சென்றத்தில் அறி வித்திருப்பது பல ஏழை எளியமக்களுக்கும் கவலை யையும் அதிர்ச்சியையும் கொடுப்பதாகும். தாம் கள் மாற்றிய பணம் தங் களுடையதல்லாமல் வேறு எவருக்காவது மாற்றிக்கொடுத்திருந் தால் அதை அவர்கள் ஏற் றுக்கொண்டு விசாரணை க்குத் தேவைப்படும் தக வல்களை அதிகாரிகளுக் குக்கொடுக்கும்பட்சத்தில் தர்மப்பணம் மீண்டும் கொடுக்கப்படும் என்றும் இல்லாவிடில் தர்மம் பணம் முற்றாக நிறுத்தப் படுமென்றும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

பதுக்கல் பணத்தை வெளியே கொண்டுவரும் அரசாங்கத்தின் நோக் கத்தை முறியடிக்க பதுக் கல் பணக்காரர்கள் தர் மப்பணம் பெறும் அநாதைகளைப் பயன்படு த்தியிருக்கிறார்களென் றும் அவர்களைக்கண்டு பிடிப்பதற்கு இதுதான் சரியான வழியென்றும் அமைச்சர் கருதலாம். இதில் தவறில்லை.

ஆனால் சமூகசேவை இலாகா மாதாந்தம் கொடுக்கும் மிகச்சிறிய தொகையுடன்யாருடைய உதவியுமற்ற ஏழை எளியவர்கள் வாழ முடியுமா? தாம் வாழ் கின்ற அயலிலுள்ளவர் களின் குறிப்பாக வசதி யுள்ளவர்களின் உதவி யும் ஆதரவும் அவர்களுக் குத்தேவை. அவர்களு டைய உதவியுடன் எத் தனைநாள் அவர்கள் பசி யாறியிருப்பார்களோ? இந்நிலையில் ''பணத்தை மாற்றித்தந்தால் பத்தோ இருபதோ தருவோம்'' என்று யாருகேட்டிருந்தா லும், இப்படியொரு விளைவு பின்னர் ஏற்படு மென்பதை அறியாத அப்பாவிமக்கள் மாற்றிக் கொடுத்து, தர்மப்பணத் தைவிட அதிகதொகை பெற்றிருக்கக்கூடும். அமைச்சர் கூறுவதுபோல் விசாரணையின்போது தகவல் கொடுத்துவிட்டு அவர்கள் எங்கேபோய் வாழ்வது?

தர்மப்பணம் பெறுப வர்கள் பிச்சையெடுத் தும், ஏதோ சிறுசிறு வேலைசெய்தும் அன்று டம் வயிற்றுப்பசியைப் போக்கிதனக்குப்பின் தன து குழந்தை குட்டி யும் தர்மம் பெறும்நிலையி லிருக்கக்கூடாதென்ற நோக்கத்துடன் இருநூறோ முன்னூறோ சேர்த்து வைத்திருக்கக்கூடாதா? அது பாபமா?

பதுக்கல் பணக்காரர் களைக்கண்டுபிடிக்க வேண் டியது தான் அதற்காக அநாதைகள் அப்பாவிகள் துன்பத்துக்குள்ளாகக் கூடாது. அமைச்சரும் அரசாங்கமும் இதுவிஷ யத்தில் புனராலோசனை செய்யவேண்டும்.

## நாடெங்கும் 500 கலாச்சார நிலையங்கள்

### அமைக்க அரசு திட்டம்

கோட்டை, திங்கள் நாட்டின் சகல இடங்களி லும் 500 கலாச்சார நிலை யங்களை ஸ்தாபிக்க அரசாங கம் தீர்மானித்துள்ளது. இவைகள் கிராமங்களுக்கு ஏற்றவகையில் செயல்படுத் தப்படும். இந்நிலையங்கள் கலை, கைப்பணிப் பயிற்சிக் காக நன்கொடைப் பணம் ழைக்கும். கிராம மக்களுக்கு நல்ல கலாச்சாரத்தைப் புகுத்த நல்ல நாடகங்களை இந்நிலை யங்கள் மேடையேற்றும். இத்திட்டத்திலும் கிராமங் கள் விருத்தியடைவதுடன், நாட்டிலுள்ள வேலையில் லாத் திண்டாட்டம் நீங்கு மெனவும் எதிர்பார்க்கப்படு கிறது.

செயலாளர்?- உபதலைவர்.

வழ: மெம்பர்கள் சபை யில்நிரந்தரமாக இடம்பெற மாட்டார்கள்?- ஆம்.

உத்தியோகத்தர்கள் நிரந் தரமாக இருப்பார்கள்?- ஆம்.

வழ: திருமலை நகரசபை யில் பலவிதமான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட துண்டு?-ஆம்.

வழ:திருமலைநகரசபையில் கடமையாற்றியபோதுகேள் விப்பத்திரங்கள்பற்றிதெரிந் நீர் எப்பொழுது திருப் பிக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறதா? ஆம்.

வழ: பணத்தைத்திருப் பிக் கொடுப்பது சபையின் கடமை? ஆம்.

வழ: பணத்தைசபை வைத் திருப்பதற்கு காரணமில்லை? விளம்பரத்தில் கூறப்பட்டி ருக்கிறது.

நீதி: தெரிவுசெய்யப்பட் டவருக்கு அறிவிக்கப்படுமா? கிடைத்தவருக்கு அறிவிக் கப்படும்.

கிறா? ஒரு தடவை வாசித் தீரா அல்லது பலதடவை வாசித்தீரா?-சில தடவை.

நீதி: எப்போ வாசித்தீர்?- சொல்ல முடியாது. 68-ம் ஆண்டு கடைசிப் பகுதியில்.

நீதி: எதற்காக வாசித்தீர்? ரெண்டர் விஷயம்பற்றி அறிய.

வழ: ஒவ்வொரு முறை யும் சுற்றறிக்கையை கவன மாகப்படித்தீர்?- வாசித்திரு ப்பேன்.

வழ: ரெண்டர் நோட் டீஸ் பற்றிய உத்தரவை எத் தனைதரம் படித்தீர்?- பல தடவை.

வழ: அது முக்கியமான விஷயமாகக் கருதினீரா?- ஆம்.

வழ: 68ம் ஆண்டு ரெண் டர் கோரப்பட்டபோது வற்றையும் முக்கியமானதா கக் கருதமுடியாது. எல்லா வற்றையும் எழுதமுடியாது.

நீதி: தெரிவுசெய்யப்படா தவர்களுக்கு அறிவிக்கப்பட் டதா? -பைலைப் பார்த்துத் தான் சொல்லமுடியும்.

வழ: ஞாபகத்தில் இல்லை என்கிறீரா? பார்க்காமல் சொல்லமுடியாது.

நீதி: ரெண்டர் எடுத்தவ ருக்கு அறிவிக்கவேண்டிய கடமை யாருடையது?-தலை வருடையது.

வழ: கடிதத்தொடர்புகள் உமக்கு ஊடாகவும் வந்து போகும்? -எனக்குத் தெரி யாமலும் எத்தனையோ கடி தங்கள் போயிருக்கிறது.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

பக்கத்திலே ஒரு வீட்டில் ஒரே விசேஷமென்றும் அங் கிருந்து தான் இந்தப் பேரொலி கிளம்பிவந்து, பலர் காதுகளையும் துளைப்ப தாகவும் அறிந்தேன். அது மட்டுமல்ல, இந்த ஒலி இரவுவரை தொடர்ந்து கேட்டு. ஒரு வேலையும் செய்ய முடியாமல் சிந்திக்க வும் முடியாமல் தடுத்து விடுமே என்று அஞ்சினேன்.

பக்கத்தில் வசிக்கும் ஓர் அன்பர் இந்த 'டப்பா' சங் கீதத்தைக் கேட்கச் சகிக்கா மல் பொலிசுக்கு டெலி போன் செய்து இதைத் தடுக்க முடியாதா? என்று கேட்டார் முன் ஒரு முறை இதுபற்றி பொலிசிடம்கேட் டதற்கு இதைத் தடுக்கத் தங்களுக்கு அதிகாரமில்லை

யாழ்ப்பாணத்தின் சினிமா சாலைகளில் புகைக்கப்படா தென்று மாநகரசபையார் உத்தரவு போட்டதால் இங்கு படம் பார்க்கும் பெண் பிள்ளைகளுக்கு எவ்வ ளவோ நன்மையாகவுள் ளது. அத்தொல்லையை ஒழித்து, பொதுமக்களின் நன்மைக்குப் பாத்திரமான யாழ். மாநகரசபையினர் ஒலிபெருக்கி விஷயமாகவும் தக்க நடவடிக்கை எடுக்க முடியாதா?


தமிழர் வீட்டுக் கொண் டாட்டமாயின் அதற்கு நாதசுர இசைதான் ஏற் றது. மங்களகரமானது. தமிழ்ப் பண்ணையும் கலை யையும் வளர்ப்பதுமாகும். இசைக் கலைஞர்களைக் கொண்டு பாட வைத்தால் பலவிதங்களிலும் நன்மை யாகும். பக்கத்து வீட்டா ரின் 'சாபத்துக்கும்' உள்ளா காமல் இருக்கலாம்,

மாநகர பிதாக்களும் பொலிஸ்அதிகாரிகளும் தமி ழன்பர்களும் இவ்விஷயத் தில் அலட்சியமாக இராமல் உடன் அக்கறை எடுத்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றே இதை எழுதுகின்றேன்.

... ...

## 'ஈழநாடு'

# ரமழான் குரலொலி



கிணற்றுக்கட்டொன்றில் ஒரு நாய் (தாகத் தால்) நாக்கை நீட்டி (நீரைப்பார்த்து) கொண் டிருந்தது. தாகம் அதை கொன்றுவிடும் போலிருந்தது. அப்பக்கமாய் நடந்துகொண் டிருந்த பாவிப் பெண்ணொருத்தி பரிதாபம் மிக்கவளாய் தன் காலணியைக் களற்றி முக்காட்டுச்சீலையில் கட்டி அதனால் நாய்க்கு நீர் எடுத்துக்கொடுத்தாள். இதனால் அவளின் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.

(நபிமொழி: கூறுபவர்: அபூஹுரைரா (றழி) ஆதாரம்; புஹாரி, முஸ்லிம்)

பூனை ஒன்று பசியால் துடித்து மடியும்வரை உணவூட்டாமலும், பூமியிலுள்ள உணவுகளைப் பொறுக்கிக்கொள்ளவிடாமலும் அதை தடை செய்துகொண்டிருந்த ஒரு பெண்மணி வேதனை (இறைதண்டனை)க்காளானள்.

(நபிமொழி: கூறுபவர்கள்: இப்னுஉமர், அபூஹுரைரா (றழி) ஆதாரம் புஹாரி, முஸ்லிம்.)

குறிப்பட்ட சில செய்கைகளோடு மாத்திரமே வணக்கம் தங்கியுள்ளது என்றெண்ணுவது தவறு. தருமப்பாதையில் செய்யக்கூடிய அனைத்துமே வணக்கமாகும். ''படைப்பினங்களெல்லாம் பரன் குடும்பம் துன்பம்-துடைக்குனரே மிக்கார் இறைக்கு'' என்பதும் நபி கருத்துத்தான். எனவே இடர்பட்டுத்தவிக்கும் ஒரு ஜீவன், அது வாய் பேசும் பிராணியாயினும், வாய்பேசாப் பிராணி யாயினும் உபகாரியாயினும், அபகாரியாயினும் காக்கப்படல்வேண்டும். இடரகற்றிக்காத்துக் கருணை காட்டுபவரே கடவுளுக்கு உகந்தவர். பாவியானவள் பண்புடையவளானதால் பரிசுத்த மாகிவிட்டாள். என முன்குரலும், பரிவு இல்லா நெஞ்சத்தான் பாவியாவான் என பின்குரலும் கூறுகின்றது. இரு ஹதீஸிலும் ஜீவகாருண்யத்தை யும் வலியுறுத்திக்காண்பிக்கப்பட்டுள்ளது. நாமும் ஜீவன்களுக்கு கருணைகாட்டுவோமாக.

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள் :-

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-39 | 5-59 | 12-20 | 3-18 | 5-51 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-11 | 4-24 |

# இலங்கை அரசின் முடிவுகளை இந்தியா ஆராய்கிறது

புதுடில்லி, நவம்பர் 9

இந்தியர்களைப் பாதிக்கும் வகையில் இலங்கை அர சாங்கம் மேற்கொண்டிருப்ப தாகக் கூறப்படும் சில முடி வுகள் பற்றிய விவரங்களை டில்லி அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுள் ளதாக வெளிநாட்டு விவ கார இலாகா அதிகாரி ஒரு வர் பத்திரிகை நிருபர்களி டம் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்துடன் செய்துகொண்டுள்ள எந்த ஒப்பந்தத்தையும் இலங்கை அரசாங்கம் மீறும் என்பதற் கான அறிகுறிகள் எதுவும் இல்லையென அந்த அதிகாரி நம்பிக்கைதெரிவித்தார்.

கச்சதீவுப்பிரச்சினை பற்றி இந்தியாவுக்கும் இலங்கைக் குமிடையே பேச்சுக்கள் நட ந்து கொண்டிருப்பதாகத் தெரிவதாகவும்பேச்சுவார்த் தைகள் மூலம் தீர்வு காண் பது என்ற 1968ல்ஏற்பட்ட உடன்பாட்டிற்கு இணங் கவே பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

## சிகிச்சைமுறையில் மாற்றம்

கோட்டை, திங்கள்

மனநோயாளர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறை வழக்கிறந்ததென் றும் புதுமையான முறை யைக் கையாழவில்லையென் றும் சுகாதார அமைச்சு கருத்துத் தெரிவித்துள்ளது

இவற்றை மாற்றியமைக் கும் வகையில் ஒரு மகா நாட்டை சுகாதார அமை ச்சு மிக விரைவில் கூட்ட விருக்கிறது.

## தஞ்சாவூரில் ராஜராஜன் நினைவுவிழா

சென்னை, நவ. 9

ராஜராஜசோழன் நினைவு தினம் தஞ்சாவூரில் கொண் டாடப்பட்டது. இக் கொண்டாட்டங்கள் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயின சென்னை பிரதம நீதியரசர் கிருஷ்ண சாமி ரெட்டியார் விழாவுக் குத் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் அவர் பேசுகையில் ''நாட்டியம் சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளைச் சிறப்புடன் வளர்த்த பெருமை ராஜ ராஜனையே சாரும் இக்கலை கள் பற்றி பிறநாட்டவரும் அறிந்து கொள்ளும் வகை யில் அக்கலைகள் விளங்கின'' என்றார்.

திரு. சா. கணேசன் திருமதி சௌந்தரம் கைலாசம் ஆகியோரும் உரையாற்றினர்.

அறநிலையப் பாதுகாப்பு இயக்குநர் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டார்.

## தாயகம் சென்றார்

பண்டத்தரிப்பு, திங்கள் கடந்த ஒருவருடமாக இலங்கையில் தங்கி இலங் கையின் பல பாகங்களிலு முள்ள திருக்குடும்பசபையி னரின் தொண்டுகளை நேரில் சென்று கவனித்த திருக் குடும்பசபை சிரேஷ் டர் சங்கைக்குரிய ஸ்ரெலாஇஸட் தமது இல ங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு ஐரோப்பா பயண மானார்.

யாழ்ப்பாணத்தில்

## இன்று ஐ. நா. தின விழா

யாழ்ப்பாணம், செவ்.

ஐக்கிய நாடுகள் தினக் கொண்டாட்ட விழாவும் பகிரங்கக் கூட்டமும் இன்று பிற்பகல் யாழ் நகர மண்ட பத்தில் நடைபெறவிருக்கி றது. யழ் மாவட்ட அர சாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா தலைமையில் நிகழும் இவ்வைபவத்தில் ஐ. நா. சபையின் இலங் கைப் பதில் அத்தியட்சகர் கலாநிதி ஸி.காட்ஷாவ், வட மாநிலக் கல்வியதிபதி திரு. வி. சங்கரலிங்கம், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு ஏ ரி. சுந்தரம் ஆகி யோர் உரையாற்றுவர்.

சிங்கள, தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளும் வாய்ப்பாட்டு சங்கீதம், இசைக்கருவி சங்கிதம் திரைப்படக்காட்சி முதலிய னவும் இடம் பெறும் யாழ். காரியாதிகாரி நன்றி தெரி வித்துப்பேசுவார்.

(கு. வி. ம.)

## புதிய திட்டம் அமைக்கப்படும்

கோட்டை, திங்கள்

பாடசாலை இன்ஸ்பெக் டர்கள் தவணை தோறும் பாடசாலைகளுக்குச் சென்று பரிசோதனை செய்யும் முறையை மாற்றி அமைக்க கல்வி அமைச்சு தீர்மானித் துள்ளது,

இதற்கான திட்டத்தை அமைக்க ஆலோசனைகள் வழங்க வெளிநாட்டு நிபு

## பகிரங்க ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வித காரணமற்ற திடீர் வேலை நிறுத்தங்கள் இனிமே லும் நடவாவண்ணம் நட வடிக்கையெடுக்கும் நோக் கத்துடனும் ஒரு பகிரங்க விசாரணை உடனடியாக வைக்கவேண்டும்', என போக்குவரத்து அமைச் சரைச் சபை கோருவதாகக் கூறும் தீர்மானத்தை திரு. சி. நாகராஜா முன்னறி வித்தல் கொடுத்துள்ளார்.

திரு. எஸ். ஜே. அன்ரனி பின்வரும் பிரேரணையைப் பிரேரிப்பார் ''பாடசாலை களுக்குச் செல்லும் மாண விகள் அணியும் வெண்ணிற உடைக்கான புடவை சாதாரணமாக வாங்குவது பெரும் கஷ்டமாகவும் அப்படி வாங்குவதானலும் அதிக விலை கொடுத்துவா ங்க வேண்டிய நிலை ஏற்படு கின்றபடியாலும் பாடசாலை மாணவிகளுக்கு அவர்களின் தொகைக்கும் தேவைக் கும் ஏற்ப மலிந்தவிலையில் அவர்கள் கற்கும் பாடசாலை கள் மூலம் இப்புடவை வருடத்தில் இரு முறை யாகிலும் கிடைக்கக் கூடிய தான ஓர் திட்டத்தைப் புதிய வருடத்திலிருந்து அமுல் செய்யும்படி பிரதம ரையும் கல்வி அமைச்சரை யும் கேட்ப தென சபை தீர்மானிக்கிறது.,'

ணர் திரு ஏ டி பட்டலே அமர்த்தப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org